பக்கங்கள்: 16 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 29 சனிக்கிழமை 12.05.2018 கதிர் 187

## போர்க் குற்றச்சாட்டால் இக்கட்டில் இராணுவம்!
### கூறுகிறார் இராணுவத் தளபதி

கொழும்பு, மே 12
போர்க் குற்றச்சாட்டுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குப் போதிய ஆதரவின்மையால், பாரதூரமான குற்றச்சாட்டுக்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய நிலையில் இலங்கை இராணுவம் உள்ளதாக இராணுவ

பக்கம் 03 »

# வழிகாட்டல் குழு 24 இல் கூடுகிறது

## புதிய அரசமைப்புக்கான நகலைத் தயாரிக்க எத்தனம்

கொழும்பு, மே 12

தேங்கிக் கிடக்கும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளுக்குப் புத்துயிர்ப்புக் கொடுக்கும் விதத்தில் அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழு எதிர்வரும் 24 ஆம் திகதி நண்பகல் 11.30 மணியளவில் நாடாளுமன்றக் கட்டடத்தில் கூடுகின்றது.

ஏற்கனவே வழிகாட்டல் குழு சமர்ப்பித்துள்ள இடைக்கால அறிக்கையின் அடிப்படையில் புதிய அரசமைப்புக்கான நகல் வடிவத்தைத் தயாரிப்பதற்கான ஒழுங்குகள் குறித்து வழிகாட்டல் குழு பிரதானமாக ஆராயும் எனத் தெரியவருகின்றது.

பக்கம் 03 »

## தனியார் பஸ் கட்டணங்களும் அதிகரிக்கும்

கொழும்பு, மே 12
அரசினால் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்பில் டீசல் விலை அதிகரிப்பு காரணமாக, தனியார் பஸ் கட்டணங்களை அடுத்த வாரம் முதல் 10 வீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை

பக்கம் 03 »

## மருத்துவர்கள் மே 17 இல் போராட்டம்

கொழும்பு, மே 12
எதிர்வரும் மே மாதம் 17 ஆம் திகதி நாடு முழுவதும் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவர் சங்கம் நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்தது.

இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கு இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், இந்தியாவுடனான எட்கா உடன்

பக்கம் 03 »

## மேல் நீதிமன்ற நீதிபதிகளாக தமிழ் பேசும் மூவர் பதவியேற்பு



கொழும்பு, மே 12
மேல் நீதிமன்ற நீதிபதிகளாகப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 13 பேரும் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை உறுதியுரையெடுத்துப் பதவியேற்றனர்.

வடக்கு - கிழக்கைச் சேர்ந்த மாவட்ட நீதிபதி

பக்கம் 14 »

## பல்கலை மாணவர்களின் செயற்பாடு அழகானதல்ல

### முதல்வர் விக்கி தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மே 12
மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வடக்கு மாகாண சபை ஒழுங்கு முறையில் செய்து வரும்போது, இடையில் வந்து நாங்கள் செய்யப் போகிறோம், நீங்கள் எல்லோரும் எங்க

பக்கம் 03 »

## யாழ்.மேல் நீதிமன்றத்தின் நீதிபதியாக பிரேமசங்கர்

### இளஞ்செழியன் திருமலைக்கு

யாழ்ப்பாணம், மே 12
யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தின் நீதிபதியாக அன்னலிங்கம் பிரேமசங்கர் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றி வரும் மாணிக்கவாசகர் இளஞ்

பக்கம் 14 »

### இது ரகசியம் அல்ல!

மொழிபெயர்ப்பு ஒரு கலை. வெறும் சொல்லுக்குச் சொல்லு மொழியைமாற்றீடுசெய்வதற்குப் பெயர் மொழிபெயர்ப்பு அல்ல.

மூலத்தின் உயிர்ப்பும், கருத்தும் மாறுபடாத வகையில் மொழிபெயர்ப்பு அமைய வேண்டும்.

பக்கம் 03 »

## தமிழ் இளைஞர்களும் ராணுவத்தில் சேருங்கள்

### யாழ். படைத் தளபதி அழைப்பு



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மே 12
தமிழ் இளையோரும் இராணுவத்தில் இணைந்து கொள்ளலாம். இராணுவத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் என்ற பதவியைப் பெறும் வாய்ப்பும் உங்களுக்கு உள்ளது. அதனைத் தவறவிடாது நாட்டின் வளர்ச்சிக்காகத் தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் இணைய வேண்டும்

- இவ்வாறு இராணுவத்தின் யாழ்ப்பாண

பக்கம் 14 »

## மாணவர் கலந்துரையாடலுக்கு யாழ். பல்கலை நிர்வாகம் தடை

யாழ்ப்பாணம், மே 12
முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைமையில் பேரெழுச்சியுடன் நடத்துவது குறித்து கலந்துரையாடும் கூட்டத்தை யாழ். பல்கலைக்கழக கைலா

பக்கம் 14 »

## மாணவப் பிரதிநிதிகளுடன் முதலமைச்சர் இன்று பேச்சு

யாழ்ப்பாணம், மே 12
முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னெடுப்பது தொடர்பில் வடக்கு முதலமைச்சருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு

பக்கம் 14 »

## மிகப் பொறுமையுடன் இருங்கள் உறவுகளே!

### காணாமற்போனோர் அலுவலகம் கோரிக்கை

கொழும்பு, மே 12
காணாமற்போனோர் விடயத்தில் நீதி வழங்கும் செயற்பாடுகள் வினைத்திறனாக இடம்பெறும் வரை, அவர்களது உறவினர்கள் பொறுமை காக்க வேண்டும் என்று காணாமற்போனோர் அலுவல

பக்கம் 14 »

### ஒட்டுசுட்டான் விகாரை விவகாரம்:

## இராணுவத் தளபதியும் விசாரணைக்கு அழைப்பு

வவுனியா, மே 12
ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள 64 ஆவது படைப் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகம் விசாரணைகள் முன்னெடுத்துள்ளது.

அந்தப் படை முகாமின் பொறுப்பதிகாரியையும், இலங்கை இராணுவத் தளபதியையும் எதிர்வரும் 25ஆம் திகதி வவு

பக்கம் 14 »

# நீதிபதிகளை நியமிக்காமல் இழுத்தடிக்கிறார் மைத்திரி

கொழும்பு, மே 12

மேல்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்ட போதிலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, போதியளவு நீதிபதிகளை நியமிக்கத் தவறிவிட்டார் என்று, அமைச்சர் அஜித் பெரேரா குற்றம் சாட்டியுள்ளார்.



## அஜித் பெரேரா குற்றச்சாட்டு

நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர், வழக்குகள் தாமதிக்கப்படுவதாகவும்; குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில்லை என்றும் அரசின் மீது குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன.

நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் தாமதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கு, மேலதிக உயர்நீதிமன்ற நீதிபதிகளை நிய்மித்து ஜனாதிபதி தமது கடமை மற்றும் கடப்பாடுகளை நிறைவேற்றவேண்டும்.

நீதி தாமதிக்கப்படுவது தவறு செய்தவர்களுக்கே நன்மையளிக்கிறது.

உயர் நீதிமன்றங்களில் சராசரியாக ஒரு வழக்கு முடிய, 17 ஆண்டுகள் செல்கின்றன. குறைந்த பட்சம், 10 ஆண்டுகளும், அதிகபட்சம் 25 ஆண்டுகளும் எடுக்கிறது.

வழக்குகளை விசாரிக்கப் போதிய நீதிபதிகள் இல்லாதமையே இந்த இழுபறிக்கு முக்கிய காரணம். இப்போது மேல்நீதிமன்றங்களில் 75 நீதிபதிகள் தான் உள்ளனர். இதனால் நாங்கள், நீதிபதிகளின் எண்ணிக்கையை 110 ஆக அதிகரிக்க வழி செய்யும் வகையில் ஐந்து மாதங்களுக்கு முன்னர் சட்டங்களை நிறைவேற்றினோம்.

தற்போது நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டிருக்கிறார்.

அடுத்து, வழக்குகள் தாமதிக்கப்படுவதற்கு இன்னொரு காரணம் சட்டமா அதிபர் திணைக்களம். சட்டமா அதிபர் திணைக்களத்தில் போதிய சட்டவாளர்கள் இல்லை. 17 ஆயிரம் வழக்குகள் உள்ள நிலையில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் வெறுமனே 113 சட்டவாளர்கள் தான் உள்ளனர்.

ஊதியம் குறைவாக இருப்பதால், சட்டவாளர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து கொள்வதற்குத் தயங்குகிறார்கள். தனிப்பட்ட முறையில் அவர்கள் வழக்குகளில் வாதாடினால் கூடுதல், நிதியை உழைக்க முடியும்.

எனவே, நாங்கள், சட்டமா அதிபர் திணைக்களத்தில் சட்டவாளர்களின் எண்ணிக்கையை 213 ஆக அதிகரிப்பதற்கும், அரச சட்டவாளர்களுக்கான ஊதியத்தை அதிகரிப்பதற்கும், நடவடிக்கை எடுத்தோம். ஆனால் நான்கு மாதங்களாகியும், இன்னமும் எவரும் ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை.

வழக்குகள் தாமதமடைவதற்கு மூன்றாவது காரணம், போதிய மேல் நீதிமன்றங்கள் இல்லை. நீதித்துறை திருத்தச்சட்டத்தில் சபாநாயகர் கையெழுத்திட்டதும், சிறப்பு தீர்ப்பாய மேல் நீதிமன்றங்களை அமைக்கும் வர்த்தமானியை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேல் மாகாணத்தில் குறைந்தது மூன்று மேல் நீதிமன்றங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய மாகாணங்களில் மேலும் 10 மேல் நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க தனியான சிறப்பு மேல் நீதிமன்றம் ஒன்றும் அமைக்கப்படும். ஜனாதிபதி, சட்டமா அதிபர் திணைக்களம், நீதி அமைச்சர் ஆகியோர் தமது பணிகளைத் துரிதமாகச் செய்யவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# வடக்கு மாகாண சபை மாங்குளம் வர அரசியல்வாதிகள், அதிகாரிகள் தடை

மாகாண விவசாய அமைச்சர் கூறுகிறார்.

வடக்கு மாகாண சபையை மாங்குளத்துக்குக் கொண்டுவர முடியாதுள்ளமைக்கு அரசியல்வாதிகளும் சில அரச உயரதிகாரிகளுமே காரணம். வேறு எந்தக் காரணமும் இல்லை.

இவ்வாறு அடித்துக் கூறியுள்ளார் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன்.

வடக்கு மாகாண சபையை மாங்குளத்துக்குக் கொண்டுவருவது தொடர்பில் உள்ள பிரச்சினைகள் குறித்துக் கேட்டபோதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பான்மையான மாகாண சபை உறுப்பினர்களுக்கு மாங்குளத்துக்கு மாகாண சபை வருவது விருப்பமில்லை. அதேபோன்று திணைக்களங்களில் வேலை செய்யும் சில உத்தியோகத்தர்களுக்கும் விருப்பம் இல்லை–என்றார்.

மாங்குளத்தில் நீர் இல்லை என்ற காரணத்தை அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இதற்கு என்ன சொல்கின்றீர்கள் என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியபோது,



மாங்குளம் நகரை அண்டிய பகுதிகளில் மண்ணின் தன்மைக்கு ஏற்ப நீர் ஆழமாகத் தான் இருக்கின்றது. நீர் இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. வடக்கில் உள்ள மிகப் பெரிய கனகராயன் ஆறு மாங்குளம் ஊடாகத்தான் செல்கின்றது. வவுனிக்குளம், இரணைமடுகுளம் என்பன அண்மித்த பகுதியில் காணப்படுகின்றன. கனகராயன் ஆற்றின் ஆற்றுப்படுகை மாங்குளம் நகரில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது. கனகராயன் ஆற்றின் ஊடாக இரணைமடுவுக்கு நீர்கொண்டு சென்று அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு நீர்கொண்டு செல்கின்ற நிலையில் மாங்குளத்தில் நீர் இல்லை என்பது முட்டாள்தனமான கருத்து.

திட்டமிட்டபடி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தலைமைக் காரியாலயம் மாங்குளத்தில் அமைந்திருக்கின்றது. இதனை அடுத்த மாதம் திறப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதனைத் தொடர்ந்து ஏனைய திணைக்களங்களும் மாங்குளத்தை நோக்கி வரவேண்டும். வடமாகாண சபையின் தலைமைக் காரியாலயமும் மாங்குளம் வரவேண்டும்.–என்றார். (ஐ)

# டொலருக்கு எதிரான ரூபாவின் மதிப்பு சரிவு

கொழும்பு, மே 12

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்றுமுன்தினம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வீழ்ச்சியடைந்தது.

இலங்கை மத்திய வங்கியின் நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில், நேற்றுமுன் தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி, 159.26 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இது கடந்த செவ்வாய்க்கிழமை இருந்த நிலையை விட 30 சதம் குறைவாகும்.

இதற்கு முன்னதாக ஏப்ரல் 25ஆம் திகதி, அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி, 159.04 ரூபாவாகக் காணப்பட்டது.

அதற்குப் பின்னர், சற்று வலுவடைந்திருந்த இலங்கை நாணயத்தின் பெறுமதி, டொலருக்கு தற்போது 159.26 ரூபாவாகச் சரிந்துள்ளது. (ஐ)

# வவுனியா சிறைச்சாலையில் நேற்று மனித உரிமைக் குழுவினர் விசாரணை

வவுனியா, மே 12

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் கைதிகளுக்கு அநீதி இழைக்கப்படுவதாகக் கைதியொருவர் நீதிமன்றத்தில் அண்மையில் சுட்டிக்காட்டியதை அடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்று அங்கு விசாரணைகளை முன்னெடுத்தது.


மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி ஆர். எம் வசந்தராஜா தலைமையில் சென்ற குழுவினர் விளக்கமறியல் சிறைச்சாலையில் நிலைமைகளை ஆய்வு செய்து சிறைக் கைதிகளிடம் நீண்ட நேரம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அண்மையில் விளக்கமறியல் சிறைக் கைதி ஒருவர் நீதிமன்றத்துக்கு வழக்கு விசாரணைக்காக அழைத்துவரப்பட்டபோது சிறைச்சாலையில் இடம்பெறும் கைதிகளுக்கு எதிரான அநீதிகள் குறித்து நீதிபதியிடம் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதன் பின்னர் கடந்த வியாழக்கிழமை வவுனியா சட்டத்தரணிகளும் சிறைச்சாலை அநீதிகளுக்கு எதிராக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து நேற்றுக் காலை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் கைதிகளிடம் விசாரணைகள் மேற்கொண்டிருந்தனர். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பொறுப்பதிகாரி,

சிறைச்சாலையினுள்ள கைதிகளிடமும், சிறைச்சாலை அதிகாரிகளிடமும், சிறைக்காவலர்களிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகள் கொழும்புத் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படும் –என்றார். (ஐ-10)



# ராஜாங்க அமைச்சராக பௌசி பதவியேற்பு

கொழும்பு, மே 12

தேசிய சகவாழ்வு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சராக ஏ.எச்.எம்.பௌசி பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் கலந்துகொண்டார். (ஐ)

# பாகிஸ்தான் பிரஜைக்கு நேற்று மரண தண்டனை

கொழும்பு, மே 12

கடந்த 2010 ஆம் ஆண்டு இலங்கைக்குப் போதைப்பொருள் கடத்திய பாகிஸ்தான் பிரஜைக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை மரண தண்டனை விதித்து உத்தரவிட்டது.



உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே குற்றவாளியாக இனம் காணப்பட்ட அவருக்கு, மரண தண்டனை வழங்கப்பட்டது.

கடந்த 2010 ஆம் ஆண்டு 8.3 கிலோகிராம் நிறையுடைய ஹெரோய்ன் போதைப் பொருளைக் கடத்தி வந்த குற்றத்திற்காகவே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. (ஐ)

# ஊவா மாகாணத்துக்கு புதிய ஆளுநர் நியமனம்



கொழும்பு, மே 12

ஊவா மாகாணத்துக்கான புதிய ஆளுநராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சட்டத்தரணி ஆரிய பண்டார ரேகவ நேற்று வெள்ளிக்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி முன்னிலையில் அவர் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# இரணைதீவு மக்களுக்கு கிடுகு வழங்கிய சுரேஷ்



பூநகரி – இரணைதீவு மக்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரனின் வழிகாட்டுதலில் கிடுகுகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் பூநகரி, இரணைதீவில் இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்துக் குடியேறிய மக்களுக்கான அடிப்படை வசதிகள் எதனையும் அரசு வழங்காத நிலையில் அவர்களை நேரில் சந்தித்து ஒரு தொகுதி உணவுப் பொருள்களைக்கடந்தசிலவாரங்களுக்கு முன்னர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் வழங்கியிருந்தார்.

இதன்போது இரணைதீவு மக்கள், தமக்குக் குடிசைகள் அமைப்பதற்குக் கிடுகுகளைப் பெற்றுத்தருமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மக்களின் கோரிக்கைக்கு அமைவாக நேற்றுத் தற்காலிகக் குடில்களை அமைப்பதற்காக 5000 மட்டை கிடுகுகள் முதற் கட்டமாக வழங்கப்பட்டுள்ளன. அடுத்த கட்டமாகவும் 5000 கிடுகுகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன.

மக்களுக்கு வழங்கப்பட்ட கிடுகுகளுக்கான நிதி அனுசரணையைப் புலம்பெயர் தமிழ் அமைப்பான 'உறவுகளுக்குக் கைகொடுப்போம்' என்ற அமைப்பு வழங்கியிருந்து. (ஐ-7)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் ஊடகத்துறையைப் பொறுத்தவரை ஆங்கிலத்தில் இருந்துதமிழுக்குச்செய்திகளை சரிவர மொழி பெயர்ப்புச் செய்யும்தகுதி வாய்ந்த ஊடகவியலாளர்கள் மிகவும் அருகி வருகின்றார்கள் என்றே நினைக்கின்றேன்.

இந்தவகையில்ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்குக் கனகச்சிதமாக – உயிரோட்டம்உள்ளவகையில் – மொழிபெயர்ப்புச்செய்யக் கூடிய ஜாம்பவான்களில் இருவருடன் நேரடியாகப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

ஒருவர் இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை உலகின் பிதாமகர் என்று போற்றப்படும் எஸ்.ரி.சிவநாயகம்.

மற்றவர் – தமிழர் தேசத்தின் குரல் என்று மதிக்கப்படும் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம். அவர் ஒரு விடுதலை இயக்கத்தின் தத்துவாசிரியராயினும், தமது இளமைக்காலம்முதல் இறுதிக்காலம் வரை ஓர் ஊடகவியலாளராகவும் வாழ்ந்தவர்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை 1990 முதல் 2005 வரையான 16 மாவீரர் தினஉரைகளை வடிவமைத்தவர் பாலசிங்கம். இந்த மாவீரர் தின உரைகள் தமிழில் மட்டுமல்ல, அதே சமயத்தில் ஆங்கிலத்திலும் வெளிவரும்.

பாலசிங்கம் தயாரித்த இந்த பதினாறுமாவீரர்தினஉரைகளின் தமிழ், ஆங்கில வடிவங்களை ஒப்புநோக்கினால் ஓர் அதிசய மொழி பெயர்ப்புச் சிற்பியின் கைவண்ணத்தை நாம் அதில் காணமுடியும்.

ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கோ, தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கோ மொழி பெயர்ப்புச் செய்யும் அல்லது உரையாக்கப் பொறுப்பை முன்னெடுக்கும் ஒருவர் தனது பணிக்கான பயிற்சிக்கு பாலசிங்கத்தின் இந்த உரை வடிவங்களைக் கருத்தில் கொள்வது சிறந்தது என நான் பரிந்துரைப்பேன்.

பாலசிங்கத்தின் மொழி ஆளுமை, சிந்தனைச்செழுமை, கருத்துத்தெளிவு, உரைவலிமை ஆகியவை இரண்டு மொழிகளிலுமே வைரங்களாகப் பளிச்சிடுகின்றமையை அந்த உரைகளை ஒப்பிடும்போது நாம் காணலாம்.

எந்தமொழியில்சிந்தித்து அந்த உரையை அவர் வடித்தார் என்று நாம் தீர் மானிக்க முடியாதவாறு இரண்டுமொழி உரைகளிலுமே சொல்லாடலும், கருத்துச் செறிவும், கோர்வையும் உயிரோட்டமாக இருக்கும்.

யுத்தத்தின் இறுதிக் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை ஒட்டி கடந்த ஒரு தசாப்த காலத்துக்குள் ஒரு சொல் நம் மத்தியில் அதிகம் இப்போது பயன்படுத்தப்படுகின்றது. அது ஆங்கிலத்தில் – Accountability. ஆரம்பத்தில் இந்த சொல்லுக்கு ஊடகப்பெரியவர் ஒருவர் செய்த மொழியாக்கம் சந்தி சிரித்தது. Account என்பதில் இருந்து வந்தது Accountability என்று சிந்தித்து அதற்குக் 'கணக்குக் கூறல்' என்று மொழிபெயர்த்தார் அந்த பிரகிருதி. ஆனால் அதற்கு கிட்டத்தட்ட சரியான மொழி பெயர்ப்பு 'பொறுப்புக் கூறல்'. அது கூட முற்றிலும் சரியானதா என்பது சர்ச்சைக்குரியதே.

சரி, இனி இந்த மொழி பெயர்ப்பு விவகாரத்தை நான் இன்று கையில் எடுத்தமை தொடர்பான விடயத்துக்கு வருகிறேன்.

கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தின்புதியகூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு தமது அரசின் கொள்கை விளக்கவுரையை ஆற்றினார் அல்லவா? அந்த உரையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அவர் என்ன சொல்லப் போகின்றார் என்று எல்லோரும் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக்கொண்டு காத்திருந்தனர் அல்லவா?

தமது உரையின் ஒரு கட்டத்தில் –

*"உண்மையான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்மானங்களை இயற்றத்தக்க கட்டமைப்பை அறிமுகப்படுத்த வேண்டும்"* – என்று ஜனாதிபதி கூறினார் என அவரது உரையின் உத்தியோக பூர்வதமிழாக்கத்தில்கூறப்பட்டது.

ஆனால், அவரது மூல உரையில் – சிங்களத்தில் – 'அரசியல் தீர்வு' என்ற சொல்லையே அவர் பயன்படுத்தினாராம். 'அரசியல் தீர்மானம்' என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. ஆனால்அதுதமிழில் – 'அரசியல் தீர்மானம்' என்றும் ஆங்கிலத்தில் 'Political decision' என்றுமே மொழி பெயர்க்கப்பட் டுள்ளது. உண்மையில் அது 'அரசியல் தீர்வு' என்றும் 'Political solution' என்றுமே மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

இதுதான் நமது மொழி பெயர்ப்பாளர்களின் கைவண்ணம்.

அண்மையில் பிரபலமான தமிழ் இணைய ஊடகம் ஒன்றில் ஒரு செய்தி பார்த்தேன். 'வீட்டுக் காவலர் சுட்டுக்கொலை' என்று இருந்தது. என்ன செய்தி எனத் தேடிப் பார்த்தேன். சுட்டுக்கொல்லப்பட்டவர் வீட்டுக்காவலர் அல்லர். ஊர்க்காவலர்தான். ஏன் இப்படிச் செய்தி வந்தது என்று துளாவினேன். விடயம் விளங்கியது. மொழிபெயர்ப்புக் குளறுபடிதான் காரணம்.

ஆங்கிலத்தில் வந்த மூலச் செய்தியில் 'Homeguard shot dead' என்று இருந்தது. Home என்றால் வீடு. Guard என்றால் காவலர். ஆக 'வீட்டுக் காவலர் சுட்டுக்கொலை' என்றாகி விட்டது மொழி பெயர்ப்பு!.

-மின்னல்-

## வழிகாட்டல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆறு மாதங்களாக செயலிழந்து போயிருக்கும் புதிய அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவை மீண்டும் கூட்டுவது குறித்து கடந்த புதனன்றுதமிழ்க்கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந் திரனும், அடுத்த நாள் எதிர்க் கட்சித் தலைவரும், கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்மற்றும்சுமந்திரன் ஆகியோரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றக் கட்டடத்தில் சந்தித்துப் பேசினர்.

இதனையடுத்தே வழிகாட்டல் குழுவை 24 ஆம் திகதி கூட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டதாக அறியவந்தது.

இந்தச் சந்திப்புக்களின்போது புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய தரப்புக்களின் சார்பில் விடயங்களைக் கையாண்டு வரும் ஐ.தே.கட்சியின் எம்.பியான ஜயம்பதி விக்கிரமரத்னவும் கலந்து கொண்டார் என அறிவந்தது.

24 ஆம் திகதி வழிகாட்டல் குழு கூடுவது குறித்து பிரதமர் தலைமையிலான வழிகாட்டல் குழுவில் அங்கம் வகிக்கும் இருபது எம்.பிக்களுக்கும் தனித் தனிக் கடிதங்கள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டன என்றும் தெரிய வருகின்றது.

வழிகாட்டல் குழு ஏற்கனவே புதிய அரசமைப்புத் தொடர்பில் ஓர் இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. அது அரசமைப்புப் பேரவையாகக் கூடிய நாடாளுமன்றத்தில் சுமார் ஒரு வாரகாலம் விவாதிக்கப்பட்டும் உள்ளது.

இடைக்கால அறிக்கை மற்றும் அது தொடர்பில் நாடாளுமன்றத்தில் பல்வேறு தரப்புக்களும் தெரிவித்த கருத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் புதிய அரசமைப்புக்கான நகல் வடிவம் ஒன்றைத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து வழிகாட்டல் குழு முதலில் ஆராயும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

# போராளிகளின் குடும்பங்களுக்கு இராணுவத்தின் உதவித் திட்டம்



போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கும், யாழ்ப்பணம் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் உதவி நலத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. யாழ். இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி கேட்போர் கூடத்தில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல்தர்ஷனஹெட்டியாராச்சியின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வறிய குடும்பங்களைச் சேர்ந்த 300 மணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ் மாதாந்தம் ஆயிரம் ரூபாவை வங்கியில் வைப்புச் செய்து அதற்கான வங்கிக் கணக்குப் புத்தகங்கள் மாணவர்களிடம் வழங்கப்பட்டன. அத்துடன் 100 மாணவர்களுக்கு சைக்கிள்களும் வழங்கப்பட்டன.

படையினரால் தெங்கு அபிவிருத்தி சபையுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் ஒரு லட்சம் தென்னங்கன்றுகளை நடும் செயற்றிட்டத்தின் கீழ் 100 குடும்பங்களுக்கான தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்குச் சுய தொழிலை மேற்கொள்ளும் பொருட்டுத் தையல் இயந்திரங்களும், அதற்கான பொருட்களும் கையளிக்கப்பட்டன. (ஐ)

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளதாகத் தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

பஸ் கட்டணங்களின் மிகக் குறைந்த கட்டணமான 10 ரூபாவிலும் மாற்றத்தைக் கொண்டு வர முடிவு செய்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுடன் வாருங்கள் என யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்திருப்பது அழகானதொரு செயற்பாடு அல்ல என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட முதலமைச்சரிடம் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பல்கலைக்கழக மாணவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை எங்களுக்குச் சொல்லாமல் தாங்கள் ஏன் இப்படிச் செய்தார்கள் என எனக்குத் தெரியாது. இந்த நினைவு நாளை நாங்கள் முன்னின்று செய்யப்போகின்றோம், அதற்கு உங்கள் ஒத்துழைப்பைத் தாருங்கள் என அவர்கள் முதலிலேயே எங்களிடம் கேட்டிருந்தால் நாங்கள் அது தொடர்பாக ஏனைய மாகாண சபை உறுப்பினர்களோடும் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கலாம்.

வடக்கு மாகாண சபை மூன்றாண்டுகளாக இதனை ஒழுங்காகச் செய்து வரும் நிலையில், நீங்கள் எல்லோரும் எங்களுடன் வாருங்கள் என அவர்கள் கூறியிருப்பது அழகானதொரு செயற்பாடு அல்ல. அவர்கள் ஏன் இப்படிச் செய்தார்கள் என்பது எனக்குத் தெரியாது.

அவர்களுடைய இந்த நடவடிக்கை எனக்கு மன வருத்தைத் தருகின்றது என்பதை மட்டுமே என்னால் தாற்போது கூற முடிகிறது. ஏனெனில் நான் எதனைச் சொல்கின்றேனோ அதனை ஊடகங்கள் வேறு வகைகளில் செய்தியாக வெளியிடுகின்றன. – என்றார். (ஐ-7)

## மருத்துவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படிக்கை உட்பட பல பிரச்சினைகளை முன்வைத்து இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவர் சங்கம் கூறியுள்ளது. (ஐ)

## போர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளபதி லெப்டினன் ஜெனரல் மஹேஸ் சேனாநாய்க்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ல வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கப் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் வியாழக்கிழமை இராணுவத் தலைமையகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பாரதூரமான குற்றச்சாட்டுக்களில் இருந்து இராணுவத்தை பாதுகாத்துக் கொள்வதற்காகத் தனக்குச் சொந்தமான ஒரு நிறுவனத்தையோ அன்றேல் சிந்தனைக் குழாமையோ அமைப்பது அவசியமாகியுள்ளது.

சர்வதேச அரங்கில் முன்வைக்கப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்களில் இருந்து இராணுவத்தைப் பாதுகாப்பதற்கு ஆவணங்களைத் தயாரிக்கும் பணியில் முற்றுமுழுதான அர்ப்பணிப்புடன் ஈடுபடுவதற்காக இலங்கை இராணுவமானது வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கான பணியகத்தை அமைத்துள்ளது.

அதன்படி, போர்க் குற்றச்சாட்டுகளிலிருந்து இராணுவத்தைப் பாதுகாக்கும் வகையிலான தரவுகளையும், ஆவணங்களையும் சேகரிக்கும் பணியில் பணியகம் ஈடுபட்டு வருகிறது.

எவ்வாறாயினும், இலங்கை இராணுவத்தினர் மீதான சர்வதேசத்தின் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை. ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுகளை முன்வைத்தால் எந்தவகையான விசாரணைக்கும் முகங்கொடுக்க நாம் தயார். – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மீண்டும் கூடுகிறது வழிகாட்டல் குழு

**நீண்ட காலம் கிடப்பில் போடப்பட்டிருந்த புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளுக்கு மீண்டும் புத்துயிர்ப்புக் கொடுக்கும் எத்தனங்கள் ஆரம்பமாகியிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.**

எதிர்வரும் 24 ஆம் திகதி நண்பகல் அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழு மீண்டும் – சுமார் ஐந்து, ஆறு மாத கால தூக்கத்தின் பின்னர் – கூடவிருக்கின்றது.

கடந்த எட்டாம் திகதி புதிய நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து, தமது அரசின் கொள்கை விளக்கவுரையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றியிருந்தார். அந்த உரையில் அரசியல் தீர்வு குறித்து காத்திரமாக ஏதும் கூறப்படவில்லை என்று கடும் ஆட்சேபம் சிறுபான்மையினர் தரப்பில் இருந்து – குறிப்பாகத் தமிழர்கள் பக்கத்தில் இருந்து – எழும்பியுள்ள சூழ்நிலையில், இப்போது மீண்டும் வழிகாட்டல் குழுவை அருட்டிவிடும் வேலைகள் நடந்திருக்கின்றன.

கடந்த புதனன்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன், அரசமைப்பு உருவாக்க விவகாரத்தைக் கையாளும் ஐ.தே.கட்சியின் எம்.பியான ஜயம்பதி விக்கிரமரத்னவுடன் சென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார். அரசமைப்பு உருவாக்க முயற்சிகளுக்குப் புத்துயிர் அளிப்பதற்காக அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழுவை மீண்டும் கூட்ட வேண்டும் என்று பிரதமரை அவர் வலியுறுத்தினார் எனத் தெரிகின்றது.

இதன் பின்னர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், சுமந்திரன் எம்.பி.சகிதம் சென்று இவ்விடயம் குறித்து பிரதமருடன் விரிவாகப் பேச்சு நடத்தினார் எனக் கூறப்படுகின்றது. இந்தச் சந்திப்பிலும் ஜயம்பதி விக்கிரமரத்னவும் பங்குபற்றினார்.

இதன் பின்னரே வழிகாட்டல் குழுவை மீண்டும் கூட்டுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டு அதற்கான திகதியும் நிர்ணயிக்கப்பட்டது.

ஏற்கனவே அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழு சுமார் 75 தடவைகளுக்கு மேல் கூடி புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான இடைக்கால அறிக்கையை ஒன்றையும் சமர்ப்பித்திருந்தது என்பது தெரிந்ததுதான்.

இந்த இடைக்கால அறிக்கையை ஒட்டி நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவையாகக் கூடி சுமார் ஒரு வாரம் வரை அது பற்றி விரிவாக விவாதித்துள்ளது. பெரும்பாலும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள், தரப்புக்கள் எல்லாம் இந்த இடைக்கால அறிக்கை தொடர்பில் – அதில் கூறப்பட்டுள்ள யோசனைகள், மாற்று யோசனைகள், திட்டங்கள் குறித்து எல்லாம் – தங்களது வாதப் பிரதிவாதங்களை மிகவும் விரிவாக முன்வைத்து விட்டன என்றே கூற வேண்டும்.

இனி, இந்த வாதப் பிரதிவாதங்கள், கருத்துக்கள் போன்றவற்றை உள்வாங்கி பொருத்தமான நகல் யாப்பு ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

அந்த நகல் யாப்பு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களினால் அங்கீகரிக்கப்படுவதோடு அதன் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களினால் அங்கீகரிக்கப்படவும் வேண்டும். அப்போதுதான் அந்த அரசமைப்பு நடைமுறைக்கு வரமுடியும்.

உத்தேச நல்லாட்சி அரசின் மூன்றாண்டு கால ஆட்சியில் புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் ஆக இடைக்கால அறிக்கை வரையே முன்னேற முடிந்துள்ளது. தற்போதைய ஜனாதிபதியின் கீழ் எஞ்சியிருக்கும் ஒன்றரை வருடகால ஆட்சியில் புதிய அரசமைப்புக்கான நகல் வடிவத்தை உருவாக்கி, அதனை நாடாளுமன்றத்திலும், சர்வஜன வாக்கெடுப்பு மூலம் பொதுமக்களிடத்திலும் அங்கீகாரம் பெறுவதற்கு முடியுமா என்பது பெரும்பாலும் சந்தேகமானதே.

அடுத்து வரக்கூடிய ஜனாதபதித் தேர்தலிலும், அதன் பின்னர் வரக்கூடிய பொதுத் தேர்தலிலும், இவை இரண்டுக்கும் முன்னரே வரவேண்டிய மாகாண சபைகளுக்கான தேர்தல்களிலும் கண் வைத்திருக்கும் தென்னிலங்கை அரசியல் கட்சிகள், அவற்றுக்கு இடையே 'றிஸ்க்' எடுத்து இந்தப் புதிய அரசமைப்பு முயற்சியில் ஈடுபாடு காட்டுமா என்பது பெரும் சந்தேகமே.

ஆயினும், அதனை ஆரம்பித்த கடப்பாட்டிற்காகவும் தமிழ்க் கூட்டமைப்பு போன்ற சிறுபான்மையினரின் பிரதான கட்சிகள் கொடுக்கின்ற அழுத்தம் காரணமாகவும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளுக்கு இணங்குவது போன்று காட்ட வேண்டிய கட்டாயம் தெற்கு அரசுத்தரப்புக்கு உண்டு.

அத்தகைய ஒரு கண்துடைப்புச் செயற்பாடாக வழிகாட்டல் குழுவை கூட்டுவதற்கு பிரதமர் ரணில் தரப்பு இணங்கியிருக்கக் கூடும்.

வழிகாட்டல் குழுவின் செயற்பாடுகளில் தேசிய நல்லாட்சி அரசின் ஈடுபாடு எத்தகையதாக இருக்கப் போகின்றது என்பதை அவதானித்தால் அதன் உண்மைத்தன்மை இலகுவாகப் புரிந்து விடும். அதனைப் பொறுத்து இருந்து பார்ப்போமே...!

# தமிழினப் படுகொலை வாரம் மே 12–18 வரை அனுஷ்டிப்பு



சிவாஜிலிங்கம் அழைப்பு

யாழ்ப்பாணம், மே 12

தமிழினப் படுகொலை வாரம் இன்று சனிக்கிழமை முதல் மே 18 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்த வாரத்தில் வடக்கு–கிழக்கு மாகாணங்களின் பல இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறும்.

இறுதி நாளான மே 18 ஆம் திகதியைத் தமிழ் மக்கள் அனைவரும் உணர்பூர்வமாக நினைவுகூர முள்ளிவாய்க்கால் மண்ணில் ஒன்றுகூட வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ் .ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழினப் படுகொலையானது உச்சக் கட்டமாக 2009 இடம்பெற்று மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இந்த நாளைத் தமிழ் மக்கள் அனைவரும் இனப்படுகொலை நாளாக அனுஸ்டித்து வருவதுடன் மே மாதம் 12ஆம் திகதி தொடக்கம் 18ஆம் வரை தமிழினப் படுகொலை வாரமாகவும் அனுஷ்டித்து வருகின்றார்கள்.

அந்தவகையில் செம்மணியில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டமைக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு யாழ். செம்மணியில் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறும். இன்று மாலை 4.30 மணிக்கு மன்னார் உயிலங் குளத்திலும், இன்று மாலை 06 மணிக்கு கிளிநொச்சி முழங்காவிலிலும் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும்.

நாளை மாலை 5.30 மணிக்கு வவுனியா பண்டாரவன்னியன் நினைவிடத்திலும், 14 ஆம், 15ஆம் திகதிகளில் யாழ். குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும்.

16ஆம், 17ஆம் திகதிகளில் அம்பாறை, மட்டகளப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும். இதனைத்தொடர்ந்து இறுதி நாளான மே 18ஆம் திகதி காலை முள்ளிவாய்க்கால் மண்ணில் முற்பகல் 10.30 மணிக்கு வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும்.

இதன்போது வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரால் தேசிய துக்க தினத்துக்கான பிரகடனம் செய்யப்படும். அன்றைய நாள் அவ்விடத்தில் அனைத்து தமிழ் மக்களும் கட்சி பேதங்களை மறந்து ஒன்றாகக் கூடி பல்லாயிரக்கணக்கான அஞ்சலித் தீபங்களை ஏற்றி நினைவு கூரவேண்டும்–என்றார்.

(ஐ–7)

# விவசாய மத்திய நிலையங்களுக்கு ஒரு வாரத்துக்குள் உரம் வழங்கல்

கொழும்பு, மே 12

விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை விவசாய மத்திய நிலையங்களுக்கு விநியோகிக்கும் பணி ஒரு வார காலத்துக்குள் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

இதற்கான ஆலோசனையை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, இலங்கை உர நிறுவனம், கொமர்ஷல் உர நிறுவனம் ஆகியனவற்றுக்கு வழங்கியுள்ளார்.

கடந்த இரண்டு வருட காலப் பகுதியில் வறட்சியின் காரணமாக சில பிரதேசங்களில் விவசாயிகளால் உற்பத்தி நடவடிக்கைகளை உரிய வகையில் மேற்கொள்ள முடியாமல் போனது.

இந்தக் காலப் பகுதியில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத்தை வழங்க அரசு 38 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்தாக அமைச்சர் தெரிவித்தார்.

விவசாயப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சின்போது இந்த விடயங்களை அமைச்சர் கூறினார்.

அமைச்சில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அரசால் இந்த வருடத்தில் உர நிவாரணத்தை வழங்குவதற்காக இதுவரை 32ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ)

# வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த சிறப்புச் செயற்றிட்டம் அவசியம்

## வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 12

வடக்கு மாகாணத்தில் 2018 ஆம் ஆண்டின் முதல் 3 மாதங்களில் 951 வீதி விபத்துக்கள் நடந்துள்ளன. அவற்றால் 16 பேர் உயிரிழந்துள்ளனர். எனவே வடமாகாணத்தில் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த சிறப்புச் செயற்றிட்டம் கொண்டுவரப் படவேண்டும் எனக் கோரி மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 122ஆவது அமர்வு நேற்று முன்தினம் பேரவைச் செயலகத்தின் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தத் தீர்மானத்துக்கான பிரேரணையை மாகாணசபை உறுப்பினர் த.குருகுலராஜா சபையில் முன்மொழிந்தார்.

2017ஆம் ஆண்டில் வடமாகாணத்தில் ஆயிரத்து 500றக்கும் மேற்பட்ட விபத்துக்கள் நடந்துள்ளன. அவற்றில் 68 பேர் உயிரிழந்துள்ளனர். 315 பேர் தலையில் பலத்த காயமடைந்துள்ளனர்.

அதேபோல் 2018ஆம் ஆண்டின் முதல் 3 மாதங்களில் 951 பேர் விபத்துக்களில் சிக்கியுள்ளனர். அவற்றால் 16 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பிரேரணையைச் சபையில் முன்மொழிந்து உறுப்பினர் குருகுலராஜா உரையாற்றினார்

இந்தப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய மாகாண சபை உறுப்பினர் ப. சத்தியலிங்கம்,

போக்குவரத்துப் பொலிஸார் வீதி ஒழுங்குகளைப் பார்க்காமல் தமது மோட்டார் சைக்கிள்களில் பொருத்தப்பட்டிருக்கும் பெட்டியைத் திறந்து வைத்துக்கொண்டு இலஞ்சம் கேட்கிறார்கள். மேலும் மக்களுக்கும் போக் குவரத்து விதி முறைகள் தொடர்பில் போதிய விழிப்புணர்வில்லை. –என்றார்.

வடமாகாணத்தில் போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் ஒழுங்காக வேலை செய்வதில்லை. இதனைவிட பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபை நடைபாதை வியாபாரிகளைக் கட்டுப்படுத்துவதில்லை. இதனாலும் விபத்துக்கள் நடக்கின்றன.

அந்தவகையில் மக்கள் மத்தியில் விபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வூட்டலைச் செய்வதோடு மட்டும் நின்றுவிடாமல் சட்டங்களை இறுக்கமாக்க வேண்டும். தண்டனைகள் கடுமையாக்கப்படவேண்டும். முதலமைச்சர் சட்டம் ஒழுங்கு அமைச்சர் என்ற வகையில் அதனைச் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

(ஐ–7)

## நாளை

13.05.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : ரேவதி பி.ப. 12.13 வ...
திதி : திரயோதசி மு.இ. 8.35 வரை
சுபநேரம் : 8.54 – 10.24 வரை
ராகுகாலம் : 04.24 – 5.54 வரை

# ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோரப்பட்டதா?

## இல்லை என்கிறார் பொன்சேகா



கொழும்பு, மே 12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தாம் மன்னிப்புக் கோரவில்லை என்று அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்பாக சரத் பொன்சேகா கடுமையான விமர்சனங்களை வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் கடந்த புதனன்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர், ஜனாதிபதியைச் சந்தித்த சரத் பொன்சேகா மற்றும் ஐ.தே.க அமைச்சர்கள், அவரிடம் மன்னிப்புக் கோரினர் எனச் செய்திகள் வெளியாகின.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள சரத் பொன்சேகா–

அண்மைய அரசியல் விவகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதி முன்வைத்திருந்த திட்டம் ஒன்று தொடர்பாக, ஜனாதிபதி யையும் பிரதமரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தேன்.

சந்திப்பின் போது, பிரச்சினைக்குரிய விவகாரங்கள் குறித்து ஊடகங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் வெளிப்படுத்துவதை விட, தம்முடன் கலந்துரையாட முடியும் என்று ஜனாதிபதி கூறினார்.

அதற்கு அப்பால், இதுபற்றி எந்தக் கலந்துரையாடல்களும் நடத்தப்படவில்லை. மன்னிப்பும் கோரப்படவில்லை.– என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

## ஆம் என்கிறார் ராஜித

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா மன்னிப்புக் கோரினார் என்பதை, அமைச்சரவைப் பேச்சாளரான ராஜித சேனாரத்ன நேற்று முன்தினம் உறுதிப்படுத்தியுள்ளார்.



புதனன்று நடந்த அமைச்சரவைக் கூட்டம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர் –


ஜனாதிபதிக்கு எதிராக அண்மையில் வெளியிட்ட கருத்துக்கு, அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர், சரத்பொன்சேகா ஜனாதிபதியிடம் வருத்தத்தை தெரிவித்து மன்னிப்புக் கோரினார் என்று கூறினார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை நிறுத்தியமை தவறு என்று சரத் பொன்சேகா கூறிய கருத்துக்கே அவர் மன்னிப்புக் கோரினார் என்றும் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

## திருமலை சிறிமாபுரத்தில் ஒருவர் சுட்டுக் கொலை

திருகோணமலை,மே 12

திருகோணமலை– சிறிமா புர பிரதேசத்தில் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்றில் இருந்த ஒருவரை, கார் ஒன்றில் வந்த இருவர் துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பிச் சென்றனர். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது உயிரிழந்துள்ளார்.



சிறிமாபுர பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய ஹேந்தவித்தாரன செலின் குமார எனப்படும் தெல் குமார என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொலைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை என்பதுடன், சடலம் தற்போது திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் திரு கோணமலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## மின்தடை

யாழ்ப்பாணம், மே 11

உயர் அழுத்த மற்றும் தாழ்அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை -

யாழ் பிரதேசத்தில்-

எள்ளன்குளம், கரணவாய், பொலிகண்டி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, நெடியகாடு, பொலிகண்டி ஐஸ் தொழிற்சாலை, பளை ஒரு பகுதி, அரசர்கேணி, கச்சாய்வெளி, தர்மகேணி, முகமாலை, இத்தாவில், எழுதுமட்டுவாழ், உசன், விடத்தற்பளை, கெற்பலி, மிருசுவில் தெற்கு, தவசிக்குளம், நாவலடி, ரோக்கியோ சிமெந்துக் கம்பனி (லங்கா) பிஎல்சி மிருசுவில், இராணுவ முகாம் மிருசுவில் ஆகிய இடங்களிலும்

கிளிநொச்சி பிரதேசத்தில் -

மல்லாவி, அனிச்சியங்குளம், பாரதிநகர், தேராங்கண்டல், தென்னியங்குளம், துணுக்காய், விநாயகபுரம், கல்விளான், பிள்ளையரர் அரிசி ஆலை, துணுக்காய் மொடோண் அரிசி ஆலை, 65வது Infantry, பனங்காமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## ஓட்டோ கட்டணம் உயர்கின்றது 10 ரூபாவினால்!



கொழும்பு, மே.12

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் நேற்று முதல் ஓட்டோ கட்டணங்களை 10ரூபாவால் அதிகரிக்க நடவடிக்கை எயடுத்துள்ளனர் என ஓட்டோ சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இதன்படி முதலாவது கிலோமீற்றருக்கான 50 ரூபா கட்டணத்தை 60ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஆனால் அடுத்த கிலோமீற்றருக்கான கட்டணத்தை 40 ரூபாவாகவே தொடர்ந்தும் பேணவுள்ளதாகவும் அந்த சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பஸ்கட்டண அதிகரிப்பு தொடர்பாக நேற்றுப் பிற்பகலின் பின்னர் அறிவிக்கப்படுமென பஸ் சங்கத்தினர் நேற்றுப் பகல் தெரிவித்திருந்தன.

## பிரதிச் சபாநாயகர் பதவி விரைவில் முடிவு வருமாம்

கொழும்பு, மே 12

பிரதி சபாநாயகர் பதவி தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்தாலோசித்து சபையில் அறிவிப்பார் என சபாநாயகர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அந்த பதவியில் இருந்து திலங்க சுமதிபால விலகியமையை அடுத்து ஏற்பட்ட வெற்றிடம் இன்னும் நிரப்பப்படவில்லை.



இது தொடர்பில் நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதன்போதே சபாநாயகர் இந்தப் பதிலை வழங்கினார்.

அதேநேரம், ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரைதொடர்பில் நேற்றுமுன்தினம் விவாதம் இடம்பெற்றது.

இதில் உரையாற்றிய தமிழ் முற்போக்கு கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ், மலையக மக்களின் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளார்



## எரிவாயு மூலம் மின்சாரம்; திட்டங்களுக்கு அனுமதி

கொழும்பு, மே 12

மூன்று திரவ இயற்கை எரிவாயு மின்திட்டங்களை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்தத் திட்டங்கள் சீனா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

தேசிய பொருளாதாரச் சபையின் பரிந்துரைக்கமைய, அம்பாந்தோட்டையில், மூன்று இயற்கை எரிவாயு மின்திட்டங்கள் அமைக்கப்படுவதற்கு அனுமதி கோரப்பட்டது.

தலா 400 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு மின்திட்டங்கள் சீனா மற்றும் இந்தியாவின் உதவியுடனும், 500 மெகாவாட் திறன் கொண்ட மற்றொரு மின் திட்டம் ஜப்பானிய அரசின் உதவியுடனும் நிறுவப்படவுள்ளன.

## 3 லட்சத்து 80 ஆயிரம் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்க நடவடிக்கை

கொழும்பு, மே 12

குறைந்த வருமானத்தைக் கொண்ட பதினான்கு லட்சம் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய புதிய நடைமுறையொன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதன் பிரகாரம் இரண்டு தசாப்தங்களுக்குக் கூடுதலான காலமாக சமுர்த்தி உதவி பெறத் தகைமையுடைய மூன்று இலட்சத்து எண்பதாயிரம் குடும்பங்களுக்கு எதிர்காலத்தில் சமுர்த்தி நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கக் கூடிய விதத்தில் உரிய நடைமுறைகளை வகுக்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் ராஜிதசேனாரத்ன தெரிவித்தார்.

கடந்த 6 ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமுர்த்திச் செயற்பாடுகளில் கடந்த காலத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாக சுட்டிக்காட்டி சமுர்த்தி உதவித்திட்டத்தை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காங்கேசன் கடலில் மிதந்து வந்த கஞ்சா



காங்கேசன்துறை,மே12

காங்கேசன்துறைக் கடலில் மிதந்து வந்த 49 கிலோ கஞ்சாவை கைப்பற்றியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். 14 பொதிகளாக அவை கரையொதுங்கின.எவரும் கைது செய்யப்படவில்லை. காங்கேசன்துறைக் கடற்படையினர் அவற்றை மீட்டு காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## தினசரி ராசி பலன் (12.05.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் சித்திரைத்திங்கள் 28 ஆம் நாள் சனிக்கிழமை துவாதசித்திதி இரவு 11.06 மணி வரை பின்னர் திரியோதசி. நட்சத்திரம்: உத்தரட்டாதி பகல் 1.51 மணி வரை பின்னர் ரேவதி. சித்தயோகம் பகல் 1.51மணி வரை பின்னர் அசுபயோகம்.

**ராகுகாலம்** - காலை 8.59 மணி முதல்10.33 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 2.52 மணி முதல் 4.21 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - சித்திரை மாத தேய்பிறை துவாதசி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - உத்தரட்டாதி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** யோசனையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். வியாபாரம் தேக்க நிலையில் இருக்கும். மாணவர்கள் கல்வித் தேர்வில் குறைந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள்.

**ரிஷபம்** இன்பமான வாரம். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். பெண்களின் ஆசைகள் நிறைவேறும். விரும்பிய மணவாழ்வு அமையும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**மிதுனம்** விருத்தியான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு மேம்படையும். வாகன வசதிகள் சிலருக்கு அமையும். வியாபாரத்தை விரிவுபடுத்த வெளியூர்ப் பயணங்கள் மேற்கொள்ள நேரும்.

**கடகம்** சுபீட்சமான நாள். பணப்புழக்கம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி நிறைந்து சுபீட்சம் உண்டாகும். பிரிந்திருந்த உறவினர்கள் வலிய வந்து சேர்வார்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும்.

**சிம்மம்** சஞ்சலமான நாள். யோசனை அதிகரிக்கும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். பிள்ளைகளால் செலவுகள் அதிகமாகும். தொழிலில் கடுமையாக உழைக்க வேண்டி வரும். கல்வியில் குழப்பங்கள் உண்டாகும்.

**கன்னி** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. எதிலும் தடங்கல், தாமதத்தின் பிறகே வெற்றி கிடைக்கும். பணவரவு சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகளால் கடன் பட நேரும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**துலாம்** அனுகூலமான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்ப உறவில் பாசமும் நேசமும் கலந்திருக்கும். சுப நிகழ்ச்சிகள் நிறைவேற சூழ்நிலை சாதகமாக அமையும். சகோதர உறவு பலப்படும்.

**விருச்சிகம்** அதிர்ஷ்டமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். கௌரவப் பதவிகள் இவர்களைத் தேடி வரும். தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு முன்னேற்றம் உண்டாகும்.

**தனுசு** கவலையான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். உத்தியோகத்தில் அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். வீட்டுப் பொருள்கள் களவு போகும் வாய்ப்புள்ளது.

**மகரம்** சுமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்ற முடன் இறக்கமுமாக இருக்கும். உடல் நலத்தில் உபாதைகள் உண்டாகும். கோபத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் சில சங்கடங்களைத் தீர்க்கலாம்.


**கும்பம்** யோகமான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். வியாபாரம் லாபகரமாக நடைபெற்று வரும். தொழிற் பிரிவினர் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெறுவார்கள். மாணவர்களுக்கு வெளிநாடு சென்று கல்வி கற்கும் யோகம் உண்டு.

**மீனம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும். சகோதர உறவு வலுவடையும்.

சந்திராஷ்டம நாள்: மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# தீர்வை இனிமேலும் இழுத்தடிக்க முடியாது

## நாடாளுமன்றில் அமைச்சர் ஹக்கீம்



இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்தை இனிமேலும் இழுத்தடிக்க முடியாது. நல்லாட்சி அரசாங்கம் தொடர முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில் தீர்வுக்கான நிரந்தர வழிகளை அரசாங்கம் வெளியிட வேண்டும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்புத் திருத்த முன்னெடுப்பு குறித்தோ இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தோ ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையில் எதுவுமே கூறாதமை கவலை தருவதாக குறிப்பிட்ட அமைச்சர், வடக்கு,கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களின் காணிப் பிரச்சினையும் தீர்க்கப்படாதிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பான ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

அரசாங்கத்தின் சாதனைகள் பற்றி ஜனாதிபதி சபையில் பேசினார்.இந்த நிலையில் சிறுபான்மை இனங்களின் வேதனைகளை பற்றி பேச வேண்டியுள்ளது. தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தோ அதற்கான அணுகுமுறைகள் அடிப்படைகள் பற்றியோ நழுவல் போக்குடனே சொல்லப்பட்டது எனக் கேள்வி எழுப்பப்படுகிறது. ஒருசில இடங்களில் மாத்திரம் சில கருத்துகளை ஜனாதிபதி கூறியிருந்தார். தமிழ் மக்களின் சம உரிமையை அடிப்படையாகக் கொண்ட அபிலாசைகளை ஏற்றுக் கொள்வதாகவும் முஸ்லிம்களின் நலன்கள், சமூகக் கலாசார தேவைகளை உறுதி செய்வதாகவும் மலையக மக்களின் சமூகபொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதாகவும் அவர் கூறியிருந்தார். ஆனால், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக எதுவும் முன்மொழியப்படவில்லை.

அரசமைப்பு தொடர்பான வழிநடத்தல் குழு பல தடவைகள் கூடி பல விடயங்கள் குறித்து ஆராய்ந்தது. அதன் எதிர்காலம் என்ன? வழிநடத்தில் குழுவின் அறிக்கை குறித்து விவாதம் நடத்த திகதி ஒதுக்கப்படவில்லை.

தேசிய அரசாங்கம் உருவாக மு.கா, த.தே.கூ போன்ற பல கட்சிகள் பங்களித்தன. கட்டம் கட்டமாக அரசமைப்பு திருத்தப்படப் போகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது தொடர்பில் ஜே.வி.பி. பிரேரணை முன்வைக்க தயாராகி வருவதாக அறிகின்றோம்.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் போன்றே முஸ்லிம்களும் காணிகளை இழந்துள்ளனர். இராணுவம் போன்றே வன இலாகா இடமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பொதுமக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

85 வீதமான இடங்களை விடுவித்துள்ளதாக ஜனாதிபதி கூறினார். இராணுவத்தின் பிடியில் இருந்த காணிகள் மாத்திரமன்றி அரசாங்க நிறுவனங்கள் கைப்பற்றிய பொது மக்களின் காணிகளும் உள்ளன. இது தவிர தமிழ் - முஸ்லிம் காணி பிணக்குகளும் இருக்கின்றன. அவற்றை எமக்குள் பேசி தீர்க்க வேண்டும். காணிகள் கைப்பற்றப்பட்டமையால் 3 ஆயிரத்திதுக்கும் அதிகமாக குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தோப்பூரில் பத்து வீட்டுத் திட்ட காணியில் படையினர் முகாம் அமைத்துள்ளனர். சில பகுதிகளில் ஹோட்டல்கள் அமைக்கப்பட்டு மீன்பிடிக்க முடியாமல் வேலி இடப்பட்டுள்ளது. மக்களின் வாழ்வாதாரத் தேவைக்காக அவர்களின் காணிகள் மீள வழங்கப்பட வேண்டும். 85 வீத காணிகள் விடுவிக்கப்பட்டன என்பது தொடர்பான உண்மைத் தன்மை கேள்விக் குறியாக உள்ளது.

இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்தில் இனிமேலும் இழுத்தடிக்க முடியாது. தேர்தல்கள் வரும் போது அது பற்றி பேசி உத்தரவாதம் வழங்கி மக்களை நம்ப வைக்க முடியாது.

கண்டி மற்றும் அம்பாறை சம்பவங்களோடு மக்கள் சட்டம், ஒழுங்கு தொடர்பில் நம்பிக்கை இழந்துள்ளனர். பேச்சு சுதந்திரம் பற்றியும் ஜனாதிபதி தனது உரையில் கூறியிருந்தார். இன்னொரு சமயத்தை அவமதித்து பேசுவோர் தொடர்பில் தண்டனை சட்டக் கோவையில் திருத்தம் செய்ய வேண்டும். வெறுக்கத்தக்க பேச்சுக்கு எதிரான சட்டத்தை இனியும் இழுத்தடிக்க முடியாது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவது தொடர்பில் சுமார் 85 கோப்புகள் உரிய ஆதாரம் இல்லை என்ற காரணத்தால் கிடப்பில் இருக்கின்றன. அனைத்து சொத்துகளும் இழந்த நிலையில் அவர்கள் எங்கு சென்று ஆதாரங்களை தேட முடியும் - என்றார்.

(உ)

# போலி அனுமதிப் பத்திரத்தில் மணல் கடத்திய இருவருக்கு தண்டம் அறவீடு

யாழ்ப்பாணம், மே 12

போலியான அனுமதிப் பத்திரத்தைத் தயாரித்து மணல் கடத்தலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவருக்கு ஒரு லட்சத்து ஆறாயிரம் ரூபா தண்டம் விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கஹந்தவல தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் அண்மையில் சுற்றுக்காவல் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

அதன்போது மணல் ஏற்றி வந்த வாகனமொன்று பரிசோதிக்கப்பட்டது. அந்தச் சமயம் வாகனத்தின் சாரதியால் மணல் கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரம் உள்ளதாகத் தெரிவித்து அனுமதிப்பத்திரம் ஒன்று முற்படுத்தப்பட்டது.

எனினும் பொலிஸாரின் விசாரணையின் போது அந்த அனுமதிப் பத்திரம் போலியானது எனத்தெரியவந்தது. அதனைத் தொடர்ந்து மணல் கொண்டு வரப்பட்ட வாகனமும் வாகனத்தின் சாரதி மற்றும் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.


சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை பிணையில் விடுவித்த நீதிமன்றம், வழக்கு விசாரணையை நேற்றுமுன்தினம் வரை ஒத்திவைத்தது.

அவர்களுக்கெதிரான வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அதன்போது சந்தேகநபர்கள் இருவரும் தமக்கெதிரான குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்வதாகத் தமது சட்டத்தரணியூடாக மன்றுக்குத் தெரிவித்தனர். அவர்கள் ஒவ்வொருவரையும் 53 ஆயிரம் ரூபாவைத் தண்டமாக செலுத்துமாறும் மணலைப் பறிமுதல் செய்யுமாறும் நீதிவான் சி.சதீஸ் தரன் உத்தரவிட்டார்.

# கைத்துப்பாக்கியை காட்டியே என்னால் சாதிக்க முடிந்தது

## கூறுகிறார் ரங்கே பண்டார



கொழும்பு, மே 12

புத்தளத்தில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு வேண்டிய நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு கைத்துப்பாக்கியைக் காட்ட வேண்டியேற்பட்டதென நீர்ப்பாசனம், நீர் முகாமைத்துவம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஆனைமடுவ பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஆனைமடுவ தொழில்நுட்பக் கல்லூரியின் அபிவிருத்தி செயற்பாட்டிற்கு வேண்டிய 380 இலட்சம் ரூபா நிதியை பெற்றுக்கொள்வதற்கு கைத்துப்பாக்கியை வெளியில் எடுக்க வேண்டி ஏற்பட்டது.

கடந்த அரசில் நான் கடமையாற்றியபோது எந்தவோர் அபிவிருத்தி செயற்திட்டத்தையும் முன்னெடுக்க இடமளிக்கவில்லை. இதனால் கைத்துப்பாக்கியை வெளியில் எடுத்தமையால்தான் அந்த விடயத்தில் என்னால் சாதிக்க முடிந்தது.

தற்போது தொழில்நுட்பக் கல்லூரி சிறந்த முறையில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

நாட்டில் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு துப்பாக்கியைப் பயன்படுத்தியாவது காரியம் சாதிக்கக்கூடிய அரசியல்வாதிகளே தேவைப்படுகின்றார்கள்.– என்றார். (ஐ)

# வில்பத்து உண்மை நிலையை நேரில் சென்று கண்டறியுங்கள்

## பொன்சேகாவிடம் ரிஷாத் வேண்டுகோள்



கொழும்பு, மே 12

வில்பத்துக் காட்டை அழித்து மக்களைச் சட்டவிரோதமாகக் குடியேற்றுவதாக தன் மீதும், வடக்கு முஸ்லிம் மக்கள் மீதும் இனவாதிகளின் போலிக் குற்றச்சாட்டுக்களுக்கும், பொய்ப் பிரசாரத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்து இது தொடர்பிலான உண்மைத் தன்மையை நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என வனஜீவராசிகள் அமைச்சர் சரத் பொன்சேகாவிடம் தாம் வேண்டுகோள் விடுப்பதாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அமைச்சரிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இவ்வாறு தெரிவித்தார்.

வில்பத்துவில் ஓரங்குல நிலமேனும் முஸ்லிம்களால் அபகரிக்கப்படவில்லை. இது அப்பட்டமான பொய் ஆகும். இது தொடர்பில் உண்மை நிலையை கண்டறிய வேண்டும் என்றே நாம் நீண்டகாலமாக கோரிக்கைவிடுத்து வருகிறோம்.

அமைச்சர் சரத் பொன்சேகா இந்த விவகாரம் தொடர்பில் கவனஞ்செலுத்துவார் என நம்புகின்றேன். எவராவது வில்பத்துக் காணியை அழித்திருந்தாலோ, அதில் குடியேறி இருந்தாலோ அவர்களுக்கு உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இந்த விடயத்தில் அந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவன் என்ற வகையில், நானும் பூரண ஒத்துழைப்பை வழங்குவேன்.–என்றார். (ஐ)

# உதயங்கவின் மனு நிராகரிப்பு

கொழும்பு, மே 12

ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

தமது வங்கிக் கணக்கைத் தடை செய்துள்ள



உத்தரவை இரத்து செய்யுமாறும், தம்மைக் கைது செய்வதற்காகக் கோட்டை நீதிவான் நீதிமன்றம் விடுத்துள்ள பிடியாணையை மீளப் பெறுமாறு கோரியும், பொலிஸ் நிதிக்குற்றப் பிரிவின் பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஹால் பிரான்சிஸ்ஸிடம் 10 கோடி ரூபா இழப்பீடு கோரியும் உதயங்க வீரதுங்க இந்த அடிப்படை உரிமைமனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு உயர் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அது நிராகரிக்கப்பட்டது. (ஐ)

# ஊடகங்களில் எப்போதும் நடுநிலைமை வேண்டும்

## வலியுறுத்துகிறார் கல்வி அமைச்சர்

கொழும்பு, மே 12

ஊடகங்கள் எப்போதும் நடுநிலையாகச் செயற்பட வேண்டுமென அமைச்சர் என்று கல்வி அமைச்சருமான அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசை எதிர்ப்பவர்களுக்கு வழங்கும் வாய்ப்பைப் போன்று அரசிற்கும் ஊடகங்களில் வாய்ப்பளிக்க வேண்டும்.

பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் தேசிய அரசு முன்னோக்கிப் பயணிக்கின்றது. சகல துறை சார்ந்தவர்களும் தொழில் கௌரவத்தைப் பாதுகாத்துக் கொண்டு அச்சமின்றிக் கடமைகளை நிறைவேற்றக்கூடிய சூழல் உள்ளது. இது அரசின் நற்செயல்களால் கிடைத்த பலாபலன். முன்னைய அரசுகளின் ஊடக ஒடுக்கு முறைகளை நல்லாட்சி அரசு ஒருபோதும் அனுசரிக்க மாட்டாது.– என்றார். (ஐ)

# மலையக ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, மே 12

மலையக ரயில் மார்க்கத்தில் ரம்புக்கன - பதுளை இடையிலான ரயில் சேவை நேற்று முன்தினம் இரவு முதல் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



கொழும்பு ரயில் நிலையத்தில் இருந்து பதுளை நோக்கிச் சென்ற தபால் ரயிலும், பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி வந்த தபால் ரயிலும் நாவலப்பிட்டி ரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் காட்டுப் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் சிறுவர்கள், பெரியோர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் உள்ளிட்ட பயணிகள் தங்களின் வீடுகளுக்குச் செல்ல முடியாமல் இரவு நேரத்தில் ரயிலினுள்ளே காத்திருந்ததாகப் பயணிகள் கவலை தெரிவித்தனர்.

உடனடியாகப் பயணிகளின் பாதுகாப்புக் கருதி நாவலப்பிட்டி பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர் எனப் பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

# யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, மே 12

மட்டக்களப்பு, வாகனேரிப் பகுதியில் யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வாகனேரி சுற்றுலா விடுதி வீதியைச் சேர்ந்த சிவலிங்கம் குமார் (33 வயது) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.



சம்பவத்தில் உயிரிழந்தவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு கால்நடைகளை பட்டியில் இட்டுவிட்டு, வாகனேரிக் குளத்தில் குளிக்கச் சென்றபோது அந்தப் பகுதியில் வைத்து யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இவரின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வாழைச்சேனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# உள்ளூர் தயாரிப்பு கார்களின் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 12

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட நான்கு கார்களின் கண்காட்சி நாளை ஞாயிறு காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல்துறையின் தலைவர் கே.கணேசநாதன் தலைமையில் இடம்பெறும் இக் கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பொன். பாலசுந்தரம் பிள்ளையும் அவரது பாரியார் திருமதி ராஜலக்ஷ்மி பாலசுந்தரம் பிள்ளையும் கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் துறை பேராசிரியர் பி.ரவிராஜன் திருமதி வாசுகி ரவிராஜனும் கலந்து கொள்வர். (ஐ)

# பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனக் கட்டணங்களும் உயரும்


கொழும்பு, மே 12

எரிபொருளுக்கான விலை அதிகரிக்கப்பட்டமையையடுத்து, தமது கட்டணங்களையும் அதிகரிக்கவுள்ளதாக, பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனச் சாரதிகள் அறிவித்துள்ளனர்.

எனினும் கட்டண அதிகரிப்பு தொடர்பில், இதுவரை எவ்விதத் தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அது தொடர்பிலான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதாகவும் பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனச் சாரதிகள் தேசிய சங்கத்தின் தலைவர் மல்ஸ்ரீ த சில்வா தெரிவித்தார். (ஐ)

# தாதியர்களின் சேவை மகத்தான பணி

- புன்னியாமின்



உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு மே 12 ஆம் திகதியும் சர்வதேச தாதியர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. செவிலியர்கள் (தாதிகள்) சமூகத்திற்கு ஆற்றும் பங்களிப்பும் அவர்களின் சேவைத் தியாகங்களையும் சிறப்பாக நினைவுகூர இத்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செவிலியர் அமைப்பு (International Council of Nurses) இத்தினத்தை 1965ஆம் ஆண்டிலிருந்து நினைவுகூருகிறது. 1953இல் ஐக்கிய அமெரிக்காவின் அரச சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரியான டொரத்தி சதர்லாண்ட் (Dorothy Sutherland) என்பவர் இத்தினத்தை செவிலியர் தினமாக அறிவிக்க வேண்டுமென விடுத்த அழைப்பை அன்றைய ஜனாதிபதி ஐசன் ஹோவர் நிராகரித்துள்ளார். இருப்பினும் 1965ஆம் ஆண்டிலிருந்து நவீன தாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்தைச் சேர்ந்த புளோரன்ஸ் நைட்டிங்கேல் அவர்களின் பிறந்த நாளான மே 12 ஆம் நாளை சிறப்பாக நினைவுகூர முடிவு செய்யப்பட்டது.

இங்கிலாந்தில் ஆண்டுதோறும் மே 12ஆம் நாளில் லண்டனில் உள்ள வெஸ்ட் மின்ஸ்டர் அபேயில் (Westmi - nster Abbey) சம்பிரதாயபூர்வமாக இந்நாள் கொண்டாடப்படுகிறது. இங்குள்ள செவிலியர் (தாதிகள்) மூலம் மாளிகையில் உள்ள விளக்கு ஏற்றப்பட்டு அங்கு வருகை தரும் செவிலியர்கள் ஒவ்வொருவராலும் கைமாறப்பட்டு பின்னர் அது அங்குள்ள உயர்பீடத்தில் வைக்கப்படும்.

இது ஒரு செவிலியரில் இருந்து மற்றொருவருக்கு தமது அறிவைப் பரிமாறப்படுவதைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. அதேநேரம், 1974 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய அமெரிக்காவிலும் கனடாவிலும் மே 9 முதல் மே 15 வரை செவிலியர் வாரம் கொண்டாடப்படுகிறது.



"ஒரு மருத்துவமனையின் இன்றியமையாத ஊழியர்கள் செவிலியர்கள்" என்பது எல்லோரும் ஒத்துக்கொள்ளும் ஒரு விஷயம். செவிலியர்கள் உலக அரங்கில் அங்கீகரிக்கப்படுகிறார்கள். இன்றைய மனித சமூகத்துக்கான தாதிமாரின் சேவையை இலகுவாக மதிப்பிட்டு விட முடியாது. சாதாரண வைத்திய சேவைகளிலிருந்து யுத்தகால வைத்திய சேவைகள் வரை ஒவ்வொரு கட்டத்திலும் இவர்களது சேவைகள் வியாபித்துக் காணப்படுகின்றன.

### புளோரன்ஸ் நைட்டிங்கேல்

பக்குவமாகவும் அதேநேரம், பொறுப்புள்ள முறையிலும் மனித அசிங்கங்களைக் கூட கவனத்திற் கொள்ளாமல் உணர்வோடு உரசி இவர்கள் ஆற்றும் சேவை மெச்சத்தக்கதே. இந்த அடிப்படையில் இவர்களின் சேவைகளை மனித சமூகம் நினைவுகூர வேண்டியது சமூகத்தின் ஒரு கட்டாயக் கடமையாகவும் உள்ளது. மறுபுறமாக 'தாதியார்தினம்' என்று வரும்போது நவீன தாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்துத்தாதியான புளோரன்ஸ் நைட்டிங்கேலை (Florence Nighti ngale, மே 12, 1820 - ஓகஸ்ட் 13, 1910) நினைவுகூராமல் இருக்க முடியாது.

தாதித்தொழிலின் புனிதத்துவத்தை உணர்த்திய இவர் போரில் காயம்பட்ட வீரர்களுக்கு ஓய்வின்றி மருந்திட்டு சேவை செய்தார். தாதிகளுக்கான பயிற்சிப் பள்ளியையும் இவரே முதலில் ஆரம்பித்தார். 'விளக்கேந்திய சீமாட்டி', 'கை விளக்கேந்திய காரிகை' (The Lady with the Lamp) என்று அனைவராலும் போற்றப்பட்ட இவர் ஓர் எழுத்தாளரும், புள்ளிவிவரவியலாளரும் ஆவார்.

பிரித்தானியாவில் செல்வச் செழிப்புமிக்க உயர்குடிக் குடும்பமொன்றைச் சேர்ந்த இவர், இத்தாலி, புளோரன்ஸ் நகரில் பிறந்தார். இவர் பிறந்த இடத்தின் பெயரைத்தழுவி இவருக்குப் பெயரிட்டார்கள். இவரின் தந்தை வில்லியம் எட்வர்ட் நைட்டிங்கேல் (1789-1880), தாயார் பிரான்செஸ் நைட்டிங்கேல் (முன்னர் ஸ்மித்) (1794 -1875). புளோரன்ஸின் தாய்வழிப் பாட்டனான வில்லியம் சிமித் அடிமை முறை ஒழிப்புக்காக வாதாடியவராவார்.

'எம்ப்லீ பார்க்' இது புளோரன்ஸ் நைட்டிங்கேலின் குடும்ப வசிப்பிடமாகும். சிறுவயதில் கணிதத்தில் திறமையுள்ள வராயிருந்த இவர் தனது தந்தையாரின் கற்பித்தலில் அப்பாடத்தில்வல்லவரானார். குறிப்பாகத் புள்ளிவிவரவியலில் ஆர்வமுள்ளவராக இருந்த இவர், தனது ஆய் வறிக்கைகளில் புள்ளி விவரங்களை அதிகளவில் பயன்படுத்தினார்.

ஒரு கிறிஸ்தவரான இவர் தனக்கு 'இறைவனால் விதிக்கப்பட்ட பணியாகவே' தாதியர் சேவையை உணர்ந்து மேற்கொண்டார். 1837 ஆம் ஆண்டில் அவருக்கு ஏற்பட்ட இந்த உணர்வு அவரது வாழ்நாள் முழுதும் நீடித்தது. பெற்றோரின், எதிர்ப்புக்கும் மத்தியில், தாதியர் சேவையில் ஈடுபடவேண்டும் என்னும் தனது முடிவை புளோரன்ஸ் 1845 ஆம் ஆண்டு அறிவித்தார். இதையடுத்து தன் வாழ்நாளையே தாதிச் சேவையில் இவர் இணைத்துக் கொண்டமை இவரது உள விருப்பையும், அவரது காலத்தைய பெண்ணுக்குரிய எதிர்பார்ப்புகளை முறியடிப்பதற்கான அடையாளப்படுத்தலாகவும் கொள்ளப்படுகின்றது.

### முன்னர் மதிப்புள்ள பணியாக கருதப்படாத வேளையில்...

அக்காலத்தில் தாதியர் சேவை ஒரு மதிப்புள்ள பணியாகக் கருதப்படவில்லை. வறிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களே இப்பணியில் ஈடுபட்டு வந்தனர். அக்காலத்தில் தாதியர் சமையல் வேலையாள்களாகவும் உயர்குடும்பங்களில் வேலை செய்யவேண்டி இருந்தது. புளோரன்ஸ் வறியவர்கள் மீதும், இயலாதவர் மீதும் அக்கறை கொண்டிருந்தார். 1844 ஆம் ஆண்டு டிசம்பரில், இலண்டனிலிருந்த ஆதரவற்றோர் விடுதியொன்றில் வறியவர் ஒருவர் இறந்தது பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது. இதனைத் தொடர்ந்து புளோரன்ஸ், ஆதரவற்றோர் விடுதிகளில் மருத்துவ வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக முன்னணியில் நின்று வாதாடினார். அக்காலத்தில் வறியோர் சட்டம் தொடர்பான சபையின் தலைவராக இருந்த சார்ள்ஸ் வில்லியர்ஸ் என்பவரின் ஒத்துழைப்பையும் அவர் பெற்றுக்கொண்டார்.



1846 ஆம் ஆண்டில் இவர் ஜேர்மனி சென்றார். அங்கு கெய்சர்ஸ்வர்த் மருத்துவமனையில் நோயாளிகளுக்குக் வழங்கப்படும் கவனிப்புகளும், மருத்துவச் சேவைகளும் இவரை மிகவும் கவர்ந்தன.

1851 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக 4 மாதங்களாக ஜேர்மனியில் கெயசர்ஸ்வர்த் மருத்துவமனையில் இவர் தீவிரப் பயிற்சியைப் பெற்றார். தாதியர் சேவையில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொள்வதில் [illegible] திருமணம் தடை செய்யும் எனக் க[illegible] ரிச்சர்ட் மொங்டன் மில்ன்ஸ் எனும் அரசியல்வாதியுடனான தனது உறவை முறித்துக் கொண்டார். பின்னாளில் சிறந்த அரசியல்வாதியும், போர்ச் செயலராகப் பணியாற்றியவருமான சிட்னி ஹேர்பேர்ட் என்பவரை ரோமில் சந்தித்து அவர்பால் ஈர்க்கப்பட்டார்.

சிட்னி ஹேர்பேர்ட் ஏற்கெனவே மணமானவர். எனினும் இருவரும் வாழ்நாள் முழுதும் நெருங்கிய நண்பர்களாகத் திகழ்ந்தனர். கிரீமியாவில் நைட்டிங்கேல் ஆற்றிய பணிகளுக்கும், பொதுவாக அவரது துறையில் ஆற்றிய பணிகளுக்கும். ஹேர்பேட் வசதிகள் செய்து கொடுத்தமையுடன் ஊக்கமும் கொடுத்து வந்தார். புளோரன்ஸும் ஹேர்பேட்டின் அரசியல் பணிகளுக்கு ஆலோசனை வழங்கி வந்தார் எனக் கூறப்படுகின்றது.



ரஷ்யப் பேரரசிற்கும், பிரான்ஸ் - ஐக்கிய இராச்சிய மற்றும் ஒட்டோமான் பேரசுப்படைக் கூட்டணிக்குமிடையே 1854 - 1856 ஆம் ஆண்டு நடந்த கிரிமியன் போரில் தனது மருத்துவப் பங்களிப்பின் மூலம் புளோரன்ஸ் நைட்டிங் கேல் புகழ் பெற்றவரானார். இந்த யுத்தத்தின் போது வெளிச்சுகாதார விடயங்களில் இவர் கூடிய கரிசனை காட்டினார்.

## இன்றைய தினம் கை விளக்கேந்திய காரிகை புளோரன்ஸ் நைட்டிங்கேலை நினைவுகூராமல் இருக்க முடியாது

மேலும், மருந்துத்தட்டுப்பாடு, குறையூட்டமும் அதிக பணியுமே நோயாளிகளான வீரர்களின் இறப்புக்குக் காரணமென புளோரன்ஸ் நைட்டிங்கேல் கருதினார். இந்தப் போர் அனுபவம் அவரது பிற்கால வாழ்வில் சுகாதாரமான சூழலைப் பேணலின் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைப்பதில் பெரும்பங்கை வகித்தது. பிரித்தானியாவில் இருந்த இராணுவ மற்றும் பொது மருத்துவமனைகளில் கவனிப்பையும், சூழலையும் மேம்படுத்த வேண்டுமென்று நைட்டிங்கேல் வாதாடி வந்தார்.

மருத்துவ வசதிகளுக்கும், சுகாதார நுட்பங்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்த மருத்துவமனைகள் பற்றிய குறிப்புக்கள் (Note, on Hospitals), அக்காலத்தில் தாதியர்களுக்கான மிகச் சிறந்த பாடநூலாகக் கருதப்பட்ட தாதியர் பணி பற்றிய குறிப்புக்கள் (Notes on Nursing), உடல் நலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள் (Notes on Matters Affecting the Health), பிரித்தானிய இராணுவத்தின் மருத்துவமனை நிர்வாகமும், செயல்திறனும் (Efficiency and Hospital Administration of the British Army) என்பவை நைட்டிங்கேல் எழுதிய புகழ் பெற்ற நூல்களுள் சில.

(09 ஆம் பக்கம் பார்க்க)

# மாகாண அமைச்சு அதிகாரிகளை சாடுகின்றனர் பெற்றோர்கள்

## மாணவர்களின் கல்வி பாதிப்பு குறித்து கவலை

வடமாகாணத்தில் மாணவர்களின் கல்வி தொடர்ந்தும் பாதிக்கப்படுவதற்கு வட மாகாணக் கல்வி அமைச்சின் சரியான திட்டமிடல்கள் இன்மையே பிரதான காரணம் என பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், அதிபர்களை உரிய முறைமையைப் பின்பற்றி இடமாற்றம் செய்யாது சிலரது விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றனர் என்றும் குற்றம் சாட்டப்படுகின்றது.

வடமாகாணத்திலுள்ள பல பாடசாலைகளில் பணிபுரியும் அதிபர், ஆசிரியர்களுக்கு அவர்கள் குறித்த பாடசாலையில் சேவையாற்ற வேண்டிய காலப்பகுதியைக் கருத்திற்கொள்ளாது அவர்களது விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப இடமாற்றங்கள் வழங்கப்பட்டு வருகின்ற அதேவேளை சில பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள் அப்பாடசாலைகளில் பணிபுரிய வேண்டிய காலப் பகுதியையும் தாண்டி இடமாற்றங்கள் ஏதுமற்ற நிலையில் நீண்ட காலமாக பணிபுரிந்து வருகின்றார்கள்.

இடமாற்ற காலத்தையும் தாண்டி குறித்த பாடசாலைகளில் நீண்ட காலமாகச் சேவையில் இருக்கும் சில அதிபர்களும் சில ஆசிரியர்களும் அப்பாடசாலைகளில் விதிமுறைகளையும் மீறி தாம் நினைத்தபடி தன்னிச்சையாகச் செயற்பட்டு வருகின்றார்கள்.

இதனால் பல மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இப்படியான சம்பவங்கள் கிராமப்புறப் பாடசாலைகளில் இடம்பெற்று வருகின்றன. இதற்கு உயரதிகாரிகள் ஆசி வழங்கி வருகின்றார்கள்.

இப்படியானவர்கள் சிலர் மாணவர்களைக் கண்டபடி தாக்கிக் காயப்படுத்துதல், உளவியல் ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் எல்லோர் முன்னிலையிலும் மாணவர்களின் குடும்பப் பின்னணி, வறுமை போன்றவற்றைச் சுட்டிக்காட்டி இழிவாகப் பேசுதல், போன்ற சம்பவங்கள் பல கிராமப்புறப் பாடசாலைகளில் இடம் பெற்று வருகின் றன. இப்படியான சம்பவங்கள் ஊடகங்களில்கூட வெளிவராது மூடி மறைக்கப்பட்டு வருகின்றன.

வடமாகாணத்தில் குறிப்பிட்ட பால பாடசாலைகளில் அதிபர்களுக்குரிய இடமாற்றங்கள் வழங்கப்பட வேண்டிய காலத்தைக் கடந்த நிலையிலும் அவர் களது மேல் மட்டச் செல்வாக்குக் காரண மாக இடமாற்றங்கள் வழங்கப்படாத நிலை தொடர்ந்து செல்கின்றது. இதனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்கள் தான்.

அதிபர்கள் சிலரின் நடவடிக்கைகள் காரணமாக பல மாணவர்கள் பாதிக்கப்பட்டு கல்வியைத் தொடரமுடியாது இடை விலகிச் சென்றுள்ளார்கள்.

தற்போதும் குறிப்பாக வன்னிப் பகுதிகளிலுள்ள பாடசாலைகள் சிலவற்றில் இப்படியானவர்களால் அவமதிக்கப்பட்ட சில மாணவர்கள் பாடசாலைப் பக்கமே செல்லமாட்டன் என்ற நிலையிலுள்ளார்கள். சில பாடசாலைகளில் சில அதிபர்கள் தமக்குப் பிடிக்காத மாணவர்களை வேறு பாடசாலைகளுக்குப் போகுமாறு வற்புறுத்தியும் வருகின்றார்கள்.

இதற்குக் காரணம் வடமாகாணக் கல்வி அமைச்சின் பக்கச்சார்பான சுயநலப் போக்கே எனக் குற்றம் சாட்டப்படுகின்றது. செய்யாத குற்றங்களுக்காக மாணவர்களைக் குற்றவாளிகளெனத் தண்டனை வழங்குபவர்களை, மாணவர்களை உடல், உளரீதியாகப் பாதிப்படையவைப்பவர்களை வடமாகாணக் கல்வி அமைச்சு பாதுகாத்து வருகின்றதா? என பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களால் கேள்வி எழுப்பப்படுகின்றது.

– சின்னராசா சிவந்தன்



# பொருத்தமானவர்கள் யார்?

இற்போது பேசு பொருளாக இருப்பது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு யார் தலைமை தாங்குவது என்றே இதில் பல்வேறு வாதப் பிரதிவாதங்களையும் தங்கள் பக்க நியாயங்களையும் முன்வைக்கின்றார்கள்.

தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்து வரும் வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் அறிக்கை வேதனையையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஒரு நாட்டின் அல்லது ஓர் இனத்தின் அல்லது ஒரு சமூகத்தின் மனிதன் என்ற வரையறைக்குள் நேர்த்தியாக விவேகமாகச் செயற்படக் கூடியவர்கள் இளைஞர்கள். அவர்களின் கரங்களில் அதிக பொறுப்புக்களை ஒப்படைக்கின்ற நாடு மிக வேகமாக முன்னேற்றமடையும் என்பது பல்வேறு துறை சார்ந்த அறிஞர்களின் கருத்தாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் விடுதலைப்புலிகளின் அமைப்பில் மாத்திரமின்றி ஏனைய இயக்கங்களிலும் முன்னணிப் போராளிகளாக இருந்து அவர்கள் புரிந்த தியாகங்களை எந்த ஒரு தமிழ் மகனும் மறந்து விடமாட்டார்கள்.

வடக்கு மாகாண அரசின் முதல் வர் முள்ளிவாய்க்கால் காணி எனது ஆளுமைக்கு உட்பட்ட பிரதேச சபைக்குரியது. ஆதலால் அங்கு நடக்கும் நிகழ்வு களுக்குத் தானே தலைமை தாங்குவேன் என்ற தொனியில் அறிக்கைவிடுவது ஆரோக்கியமானதல்ல. அப்படியானால் இராணுவம் கையடக்கி வைத்திருக்கும் காணிகளும் உங்கள் ஆளுமைக்கு உட்பட்டவை தானே. அதற்கான உரிமையைக் கோரி விமோசனம் கிடைத்தால் வீதி வீதியாகப் போராடும் மக்கள் நிம்மதியாக வாழ்வார்களே.

ஈழத் தமிழர்களின் பிரச் சினையை உலகறியச் செய்வதற்குவீறுகொண்டெழுந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இராணுவக் கெடுபிடிக்கு மத்தியிலும் எழுச்சி மிகு பொங்குதமிழ் நிகழ்வை நடத்தி உலகிற்கு தமிழனின் ஒருமித்த குரலாகத் திகழ்ந்தார்களே அதனை மறக்க முடியுமா?

எத்தனை மாதங்களாக முள்ளிவாய்க்காலில் எத்தனை பல்கலைக்கழக மாணவர்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு நினைவுத்தூபி அமைக்கும் பணியும் கைகூடாது போனது மனவருத்தத்திற்குரியது.

உயிர் நீத்த தமிழ் மக்களுக்கும் விடுதலையில் ஆகுதியாகிய வீரமறவர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்ற நிகழ்வில் எந்த அரசியல்வாதிகளும் தலையிடாது உணர்வுபூர்வமாகச் செயலாற்ற பல்கலைக் கழக மாணவர்களின் தலை மையே மிகச் சிறப்பானதாகும்.

இரா.எழுச்சியன்
பழைய மாணவன்
யாழ்.பல்லைக்கழகம்

# தாதியர்களின் சேவை...



(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

போரிலிருந்து நாடு திரும்பிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் சாதனைப் பெண்மணியாக வரவேற்கப்பட்டார்.

விக்டோரியா அரசிக்கு அடுத்தபடியாக மிகவும் அறியப்பட்ட பெண்ணாக 'பி.பி.ஸி' யினால் இனங்காட்டப்பட்டார்.

தாதியர் சேவையை நிறுவி அதை முன்னேற்றும் பணியிலேயே அவர் தனது வாழ்நாளைக் கழித்தார். மருத்துவமனைத் திட்டமிடலிலும் இவரது கருத்துக்கள் முன்னோடிகளாக இருந்ததுடன் இங்கிலாந்தின் பிற பகுதிகளிலும் ஏனைய நாடுகளிலும் அவை முன்னெடுத்துச் செல்லப்பட்டன. 1869ல் எலிசபெத் பிளாக்வெல் என்பவருடன் இணைந்து பெண்களுக்கான மருத்துவ கல்லூரியொன்றையும் இவர் தோற்றுவித்தார். 1882 ஆம் ஆண்டளவில் நைட்டிங்கேல் தாதியர் பரவலாகச் சேவை புரிந்தனர். புளோரன்ஸ் நைட்டிங்கேல் 1883 இல் விக்டோரியா அரசியிடமிருந்து அரச செஞ்சிலுவை விருது பெற்றார்.

1907 இல் ஓர்டர் ஒவ் மெரிட் எனும் விருதும் இவருக்கு வழங்கப்பட்டது. இவ்விருதைப் பெற்ற முதல் பெண்மணி இவராவார். அதீத களைப்பு ஏற்படல் (Chronic Fatigue Sydnrome) எனும் நோய் இவருக்கு இருந்ததாக கருதப்படுகிறது. இவரது பிறந்த நாள் இந்நோய் பற்றிய விழிப்புணர்வைப் பரப்பும் நாளாகவும் உள்ளது. புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பெயரைத் தாங்கியுள்ள பல நிறுவனங்கள் தாதியியல் சார்ந்தவையாயினும், கனடாவிலுள்ள நைட்டிங்கேல் ஆராய்ச்சி மையம் புளோரன்ஸ் நைட்டிங்கேலுக்கு இருந்ததாக நம்பப்படும் அதீத களைப்பு ஏற்படல் நோய் (Chronic Fatigue Sy[illegible]nrome) பற்றி ஆராய்கிறது.


1896 ஆம் ஆண்டளவிலிருந்து படுத்த படுக்கையானார். ஓகஸ்ட் 13, 1910 இல் இவர் இறந்த போது வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் புதைக்க அரசு முன்வந்தது. ஆனால் அவரது உறவினர்களால் அது மறுக்கப்பட்டது. புளோரன்ஸ் நைட்டிங்கேலின் உடல் ஈஸ்ட் வெலோவிலுள்ள புனித மார்கரட் தேவாலய இடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. நைட்டிங்கேல் தாதியர் பயிற்சிக்கூடத்தின் சேவை இன்றும் தொடர்கிறது.

### அருங்காட்சியகம்

புளோரன்ஸ் நைட்டிங்கேல் அருங்காட்சியகம் ஒன்று லண்டனிலும் இன்னுமொன்று இவரது வீடான கிளெய்டன் ஹவுஸிலும் உள்ளன. ரோமில் உள்ள அகஸ்டினோ ஜெமெல்லி மருத்துவ நிலையம் (இத்தாலியின் முதல் பல்கலைக்கழகஞ் சார் மருத்துவமனை)தாதியியலில் புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பங்களிப்பைக் கௌரவிக்கும் முகமாக தாதியருக்கு உதவும் படுக்கையருகே வைக்கும் கம்பியில் [illegible] இணைப்புக் கொண்ட கணினியொன்றுக்கு 'பெட்சைட் புளோரன்ஸ்' (bedside Florence) எனப் பெயரிட்டுள்ளது.

மருத்துவ மற்றும் தாதியியற் துறைகளிலேயே இவர் புகழ் பெற்றிருந்தமையைப் போலவே இங்கிலாந்தின் பெண்ணியத்திலும் முக்கியமான ஒருவராகத் திகழ்ந்தார்.

இத்தினத்தில் புளோரன்ஸ் நைட்டிங் கேலை நினைவு கூரும் அதேநேரத்தில் உலகெங்கிலும் சேவை புரியும் தாதியர்களின் மகத்தான பணிகளையும் கண்ணியப்படுத்தி கௌரவிப்பதானது அவர்களுக்கு உலக மக்கள் வழங்கும் அதியுயர் அங்கீகாரமாகும். ★




# கல்விக் கதிர் வெளியீடு

புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் **32**

தரம்-5

பகுதி - I

32) இவ்வுருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை



1. 8 2. 10 3. 12

33) 200 இன் அரைவாசியின் ¼ உடன் 5 ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?

1. 25 2. 30 3. 35

34) Aயின் தந்தை Bயின் மகனெனின், A ஆனவர் Bயிற்கு என்ன உறவுமுறை?

1. பேரன் 2. பாட்டன் 3. மகன்

- ஒரு கவிதையின் நான்குவரிகள் மாற்றிமாற்றி எழுதப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கு முறையாது?

35) A) வீட்டில் என்னிடம் இருக்கிறது

B) நித்தம் நித்தம் அதன் முன்னால்

C) மெத்தப் பெரியகண்ணாடி

D) நின்றே அழகு பார்த்திடுவேன்

1. C, B, A, D 2. C, A, B, D 3. D.C, A, B

## வினாத்தாள் 30இற்கான விடைகள் பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 3 | 9) 3 | 17) 2 | 25) 2 | 33) 2 |
| 2) 2 | 10) 3 | 18) 2 | 26) 1 | 34) 3 |
| 3) 1 | 11) 1 | 19) 2 | 27) 1 | 35) 2 |
| 4) 1 | 12) 3 | 20) 3 | 28) 1 | 36) 3 |
| 5) 1 | 13) 3 | 21) 5 | 29) 2 | 37) 3 |
| 6) 1 | 14) 2 | 22) 1 | 30) 3 | 38) 2 |
| 7) 3 | 15) 1 | 23) 1 | 31) 2 | 39) 1 |
| 8) 1 | 16) 2 | 24) 2 | 32) 1 | 40) 1 |

## வினாத்தாள் 30 இற்கான விடைகள் பகுதி II

I. பொறாமை
II. குரங்கு, பூனை
III. குட்டி
IV. மரங்கள்
V. சென்று
VI. 1. கவலை
2. நன்று

2. I. குரங்கு இருக்கும்
II. கொண்டு அணைத்து

3. I.ஆறப்போடல்
II. நட்டாற்றில் விடல்

4. I. வியர்த்தது
IL. கோடரி
III. தேநீர்

5.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மு | ய | ல் |
| | | | ஆ | ல | ய | ம் |
| | | ச | து | ர | மு | கி |
| | வி | வ | சா | யி | க | ள் |
| உ | ட | ற் | ப | யி | ற் | சி |

6. மலைகளிலிருந்து அருவிகள் கொட்டின

7. I. பேத்தை
II. குஞ்சு

8. I. இயற்பெயர்
II. தசரீப்தம்

9. I. நாங்கள் ஒருபடம் வரைவோம்
II. உங்கள் கைகளைக் கழுவுங்கள்.

10. I. Please get out
II. Clap your hands

11. உங்களுடைய தந்தையின் பெயர் என்ன?

12. I. புறாவை சமாதானப் பறவை என்றும் கூறுவார்கள்
II. தினமும் வீட்டில் சுத்தம் பேண வேண்டும்

13. I. பறந்தன
II. வருகின்றன

14. 3

15. அதிகமாக சேமித்தல்

16. பொருத்தமான வாக்கியம்

17. இரண்டாயிரத்து ஐநூற்று அறுபத்துநான்கு

18. □

19. 20 நாட்கள்

20. 54 cm

21. 22.00

22. 8

23. 58


24. 56

25. 260.00

26. 350 ml

27. 120

28. 25





29. 574.00
30. 60.00
31. 1
32. 1
33. 4
34. 4
35. 3
36. 4
37. 2
38. 2
39. 3
40. 1
41. 3
42. 3
43. 3
44. 4
45. 1
46. 4
47. 4
48. 1
49. 2
50. 1

## சிறுவர் செய்கை




கத்தரிக்கோலால் படங்களை வெட்டி சரியாக இணைத்துக் கொள்ளுங்கள்



## நிறம் தீட்டலாம் வாங்க



## 06 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்





## தம்பி, தங்கையரே!



காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்'
சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

# முன்னாள் போராளிகளின் கடன்களை அரசு உடன் இரத்துச் செய்ய வேண்டும்



நாடாளுமன்றில் டக்ளஸ் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மே 12

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வு அதிகார சபையினால். வழங்கப்பட்டதாக கூறப்படும் கடனை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற கேள்வி நேரத்தில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

யுத்த முடிவின் பின்னர், புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வு அதிகாரசபையினால், ஒருவருக்கு சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் நிதி வழங்கப்பட்டதாகவும், மேற்படி நிதி மானிய அடிப்படையில் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இந்த நிதி புனர்வாழ்வளிப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரால், மாவட்ட செயலகங்களில் வைத்து கடந்த 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி வழங்கப்பட்டது. இதன்போது இந்த நிதி வங்கிக் கடன் எனத் தங்களுக்கு அறிவுறுத்தப்படவில்லை எனப் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் இயக்க உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மேற்படி நிதியை தவணை முறையில் செலுத்தத் தவறியமைக்காக, இலங்கை சேமிப்பு வங்கியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக சட்டத்தரணி ஒருவரால் கடந்த ஜனவரி 11ஆம் திகதி தமக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அந்தக் கடிதத்தின் பிரகாரம் 14 நாள்களுக்குள் முழுத் தொகையையும் செலுத்தத் தவறின், சட்ட வட்டி மற்றும் வழக்குச் செலவு என்பவற்றுடன் சேர்த்து முழுத் தொகையையும் அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் இயக்க உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்படி மேற்படி நிதியை வங்கிக் கடன் என்கின்ற அறிவுறுத்தல்கள் இன்றியே, ஓர் அரசியல் ஏற்பாடாக அப்போது வழங்கப்பட்டதாக கருதுகின்ற மேற்படி முன்னாள் இயக்க உறுப்பினர்கள், தற்போது வேலைவாய்ப்புகள் இன்றி, பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கியிருக்கின்ற நிலையில், தங்களால் மேற்படி நிதியை செலுத்துவதற்குரிய மார்க்கங்கள் இல்லை என்றே தெரிவிக்கின்றனர்.

எனவே, இவர்களது நிலைமையை கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.--என்றார். (ஐ)

## புதுக்குடியிருப்பு வணிகர் சங்கம் வடக்கு முதல்வருடன் சந்திப்பு

முல்லைத்தீவு, மே 12

புதுக்குடியிருப்பு பிரதேச வணிகர் சங்கம் வடக்கு மாகாண முதலமைச்சர் க வி.விக்னேஸ்வரனைச் சந்தித்து உதவி கோரியுள்ளது.

புதுக்குடியிருப்பு வணிகர் சங்கத்தின் தலைவர் செ.செல்வச்சந்திரன், செயலாளர் கீ.கோல்டைன், பொருளாளர் ச.சசிக்குமார் ஆகியோர் கடந்த 9ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்தனர்.

புதுக்குடியிருப்பு வணிகர் கழகத்துக்காகப் பிரதேச செயலாளரினால் ஒட்டுசுட்டான் வீதியில் 30 பேர்ச் காணி கொடுக்கப்பட்டது. அந்தக் காணியில் காரியாலயம், மலசலகூடம் கடைத்தொகுதி,பொது மண்டபம் அமைப்பதற்கான தீர்மானம் கடந்த பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு



நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு முதலமைச்சரிடம் வணிகர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கான நிதியைப் பெற்றுத் தருவதாக முதலமைச்சர் உறுதியளித்தார் என்று புதுக்குடியிருப்பு வணிகர் சங்கத் தலைவர் செ.செல்வச்சந்திரன் கூறினார். (ஐ)

## மரக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக சாந்த

கொழும்பு, மே 12

அரச மரக்கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.


அவர் தனது நியமனக் கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து நேற்று மதியம் பெற்றுக்கொண்டார்.



கடந்த 4ஆம் திகதி அரச மரக்கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட அனுருத்த பொல்கம்பலவின் நியமனம் ரத்துச்செய்யப்பட்டதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகச் செயற்பட்ட பீ. திஸாநாயக்க இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பின்னரே அந்த வெற்றிடத்திற்கு அனுருத்த பொல்கம்பல நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தெரிவான உறுப்பினர்களுக்கு பயிற்சிக் கருத்தமர்வு



யாழ்ப்பாணம், மே 12

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் - SLILG, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்-யு.என்.டி.பி. ஆகியவற்றின் அனுசரணையுடன், வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் வடக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதிதாகத் தெரிவு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கருத்தமர்வுத் தொடரின் முதலாவது கருத்தமர்வு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் விடுதியில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெற்றது.

வடக்குமாகாண முதலமைச்சரும், ஓய்வுபெற்ற நீதியரசருமான சி.வி. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் வட மாகாண முதலமைச்



சரின் அமைச்சுச் செயலாளர் தொடக்கக் கருத்துரையை வழங்கினார்.

தொடர்ந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான சட்ட ஏற்பாடுகள் என்ற தலைப்பில் ஆசிய நிறுவகத்தின் சட்ட ஆலோசகர் எச். ஜி. சீ. ஜெயதிஸ்ஸவும், பொதுக் கணக்காய்வு என்ற தலைப்பில் வடமாகாண பிரதிக் கணக்காய்வாளர் நாயகம் ஜி. தேவஞானம், உள்ளூராட்சி மன்றத் தீர்வை, நீதிமன்றத் தண்டப் பணம் தொடர்பான மாகாண திறைசேரியின் வகிபாகம் என்ற தலைப்பில் வட மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ்.யூ. சந்திரகுமார், பெறுகை நடைமுறைகள் என்ற தலைப்பில் வட மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல்) எந்திரி எஸ். சண்முகநாதன், உள்ளகக் கணக்காய்வு என்ற தலைப்பில் வட மாகாண பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் திருமதி எஸ். சுரேஜினி ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினர்.

நேற்றைய நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த யாழ். மாநகர சபை, நகர சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை -

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான கருத்தமர்வு எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் விடுதியிலும், வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களுக்குத்தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான கருத்தமர்வு எதிர்வரும் 15 ஆம் திகதி வவுனியாவிலுள்ள ஓவியா விடுதியிலும் நடைபெறவுள்ளது என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தெரிவித்தார். (ஐ-7)



## கிழவன்குளம் பகுதியில் யானைகள் அட்டகாசம்

முல்லைத்தீவு, மே 12

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிழவன்குளம் கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்-

அண்மைய நாள்களாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு ஊரினுள் புகுந்த காட்டு யானைகள் பயன்தரு மரங்கள் பலவற்றை அழித்துள்ளன. காட்டு யானைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.--என்றனர். (ஐ)

காலைக்கதிர்



## வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த

# ட்ரம்ப் – கிம் சந்திப்பு சிங்கப்பூரில் ஜூன் 12 இல்

வொஷிங்டன்,மே 12

**அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் வட கொரியத் தலைவர் கிம் ஜோங்-உன் முதல் முறையாக சந்திக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உச்சி மாநாடு சிங்கப்பூரில் ஜூன் 12 ஆம் திகதி நடக்கும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.**

சில மாதங்கள் முன்பு வரை கடுமையான சொற்போரில் ஈடுபட்டு வந்த இரண்டு நாடுகளின் தலைவர்களும், அடுத்தடுத்து எதிர்பாராத விதமாக நடந்த நேர்மறையான நிகழ்வுகள் மற்றும் ராஜீய முயற்சிகளின் விளைவாகத் தற்போது பேச்சு வரை வந்துள்ளார்கள்.

கடந்த மார்ச் 9ஆம் திகதி முதல் முறையாக கிம் விடுத்த நேரடிப் பேச்சுக்கான அழைப்பை ஏற்று உலகை அதிர வைத்தார் ட்ரம்ப்.

சமீப வாரங்களில் இரண்டாவது முறையாக அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மைக் பாம்பியோ புதன்கிழமை வட கொரியா சென்று திரும்பினார். அவரது பயணத்தின்போது வடகொரியாவின் சிறையில் இருந்த மூன்று அமெரிக்கக் குடிமக்களை அந்நாடு நல்லெண்ண நடவடிக்கையாக விடுவித்தது.

அவர்கள் உடனடியாக அமெரிக்கா திரும்பினர். அப்போது டுவிட்டர் மூலம் கருத்துத் தெரிவித்த ட்ரம்ப், கிம்- பாம்பியோ இடையே நடந்த சந்திப்பு நல்ல விதமாக இருந்தது எனவும், உச்சி மாநாட்டுக்கான திகதியும், இடமும் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில் அடுத்த நாளே ட்ரம்ப்-கிம் சந்திப்புக்கான திகதியும், இடமும் அறிவிக்கப்பட்டுள்ளன. வடகொரியாவில் இருந்து விடுவிக்கப்பட்ட அந்த மூன்று பேரும் அமெரிக்கா வந்தடைந்த சில மணி நேரங்களில் இந்தத் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்கொரியாவுக்கும் வட கொரியாவுக்கும் இடையில் நிலவி வந்த பதற்றம் அடிப்படையான சிக்கலாக இருந்த நிலையில், வட கொரியா – தென் கொரியா உறவில் பதற்றம் தணியத் தொடங்கியது. பகைமை பாராட்டிவந்த இரண்டு சகோதர நாடுகளும் கூட்டாக ஒரே கொடியின் கீழ் குளிர்கால ஒலிம்பிக்கில் பங்கேற்றன. கிம் ஜோங்-உன்னின் சகோதரி தென் கொரியா சென்று வந்தார். அமெரிக்கா சென்ற தென் கொரிய அதிகாரிகள் முதலில் கிம் விடுத்த நேரடிப் பேச்சுக்கான அழைப்பை ட்ரம்ப் ஏற்றுக்கொண்டமையை உறுதி செய்தனர். பிறகு இதை உறுதி செய்து ட்ரம்ப் ட்வீட் செய்தார்.

**அமெ. சிங்கப்பூர் இடையே நெருக்கமான நட்புறவு**

சிங்கப்பூருக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நெருக்கமான நட்புறவு இருக்கிறது. அதேநேரம் சிங்கப்பூர்–வடகொரியா இரு நாடுகளுக்கும் இடையில் தூதரக உறவுகள் உள்ளன. ஆனால், வடகொரியா அடுத்தடுத்து நடத்திய அணு ஆயுத மற்றும் ஏவுகணைச் சோதனைகளைத் தொடர்ந்து சர்வதேசத் தடைகள் கடுமையானபின், வடகொரியாவுடனான எல்லா வர்த்தக உறவுகளையும் சிங்கப்பூர் துண்டித்துக்கொண்டது.

உயர்மட்ட ராஜீய நிகழ்வுகளை நடத்துவதற்கு சிங்கப்பூர் அவ்வப்போது தேர்ந்தெடுக்கப்படுகிறது. 2015 ஆம் ஆண்டு, சீனா மற்றும் தைவான் நாடுகளின் தலைவர்கள் 60 ஆண்டுகளில் முதல் முறையாகச் சந்தித்துப் பேசிய நிகழ்வும் சிங்கப்பூரில்தான் நடந்தது.

இந்தச் சந்திப்பை நடத்துவதற்குப் பரிசீலிக்கப்பட்ட பிற இடங்களில் மங்கோலியா, இரண்டு கொரிய நாடுகளுக்கும் இடையிலான ராணுவ நீக்கம் செய்யப்பட்ட பகுதி ஆகியவையும் அடங்கும்.

பேச்சுகளின் முக்கிய அம்சமாக வட கொரியா தம் வசம் உள்ள அணு ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்று அமெரிக்கா கோரும்.

வட கொரியா எதை எதிர்பார்க்கும், எதைக் கைவிட முன்வரும் என்பது குறித்து அதிகாரபூர்வமாக எதுவும் தெரியவில்லை. ஆனால், தமது நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளை அகற்றக் கோருவது மற்றும் கொரிய தீபகற்பத்தில் உள்ள 30,000 அமெரிக்கத் துருப்புகள் விடயம் ஆகியவையே வட கொரியா பேச்சு நடத்த விரும்பும் பொருள்களாக இருக்கும்.

சர்வதேசத் தடைகளை மீறி 2006 முதல் வட கொரியா 6 அணு ஆயுதச் சோதனைகளை நடத்தியுள்ளது. இதனால் அது பொருளாதாரத் தடைகளையும், கண்டனங்களையும் எதிர்கொண்டபோதும் தனது நாட்டுப் பாதுகாப்புக்கு அணு ஆயுதங்கள் தேவை என்ற கருத்தை அது வலியுறுத்தி வர் துள்ளது.

இந்த அணு ஆயுதத் திட்டங்களை முழுவதும் வடகொரியா விட்டுவிடவேண்டும் என்பதே அமெரிக்காவின் எதிர்பார்ப்பு. இவ்வளவு கடின முயற்சிகள் மூலம் அடைந்த அணு ஆயுதத் திட்டத்தை அவ்வளவு எளிதாக வட கொரியா விட்டுக் கொடுக்குமா என்பதில் ஆய்வாளர்கள் ஐயம் கொண்டுள்ளனர்.

ஆனால், இந்தச் சந்திப்புக்கு முன்னதாக எல்லா அணு ஆயுதச் சோதனைகளை யும், பேலிஸ்டிக் ஏவுகணைப் பரிசோதனைகளையும் நிறுத்தி வைப்பதாக வட கொரியத் தலைவர் கிம் ஜோங்-உன் அறிவித்துள்ளார். ஓர் அணு ஆயுதச் சோதனை சாலையையும் மூடப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# அணைக்கட்டு உடைந்து அனர்த்தம் கென்யாவில் நூறு பேர் வரை சாவு



நைரோபி, மே12

கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவில் உள்ள நாகுரு கவுண்டியில் படேல் என்ற அணைக்கட்டு கடும் மழை வெள்ளப்பெருக்கால் உடைந்ததால் பேரழிவு ஏற்பட்டது. இதில் சிக்கி 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 60 பேர் வரைக் காணாமற் போயுள்ளனர். 500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனக் கென்யா செஞ்சிலுவை சங்கத்தால் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அணைக்கட்டின் மதகுகள் உடைந்தமையால், அணையில் இருந்த தண்ணீர் வெள்ளமாகப் பாய்ந்தது. தண்ணீர் கரையோரம் இருந்த வீடுகளையும் அடித்துச் சென்றது. நூற்றுக் கணக்கான வீடுகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன. வீடுகளில் இருந்த மக்களும் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர்.

விரைந்து வந்த மீட்பு படையினர் மற்றும் செஞ்சிலுவைச் சங்கத்தினர், மீட்பு பணியை மேற்கொண்டனர். இதில் ஏராளமானோர் இறந்தனர் என அஞ்சப்பட்டது. இந்தச் சம்பவத்தால் தற்போது 44 பேர் உயிரிழந்துள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன 40 பேர் காணாமற் போயுள்ளனர் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மேலும், பலர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

தொடர்ந்துமீட்புப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அணைகளில் இருந்த தண்ணீர் வெளியேற்றுவதற்காக நீர் வழிகள் திறக்கப்பட்டுள்ளன. அந்த அணைக்கு அருகே ஒரு கிராமம் முழுவதும் காலி செய்யப்பட்டுள்ளது.

மேலும் அணையால் பாதிக்கப்பட்டவர்கள், பெரும்பாலும் தொழிலாளர்கள் மற்றும் சிறிய அளவிலான விவசாயிகள் ஆவர். கிராமத்தில் வசிக்கும் பெரும்பான்மை மக்கள், அங்குள்ள ஒரு பெரிய பண்ணையில் தோட்டக் கலை, கோப்பி, தேயிலை சார்ந்த பணியில் ஈடுபட்டு வந்தனர்.

# லொறி - வான் மோசமான விபத்து பாகிஸ்தானில் 10 பேர் கோரச் சாவு



இஸ்லாமபாத்,மே12

பாகிஸ்தான் கைபர் பக்துன்வா மாகாணம் அபோதாபாத் மாவட்டம் சப்சி மந்திமூர் என்ற பகுதியில் இடம்பெற்ற மோசமான விபத்தில் பத்துப் பேர் வரை உயிரிழந்தனர். பதினைந்துக்கும் மேற்பட்ட பயணிகளுடன் வான் ஒன்று அவ்வழியில் சென்றுகொண்டிருந்தது. அப்போது அந்த வழியாக வந்த லொறி ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வான் மீது பயங்கரமாக மோதியது.

இதில் பயணம் செய்த 10 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து தகவலறிந்து வந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்ந்தனர். 6 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# சட்ட உதவியுடன் சுவிஸில் உயிர் துறந்தார் 104 வயதுடைய ஆஸ்திரேலிய பேராசிரியர்



ஜெனீவா, மே12

ஆஸ்திரேலியாவின் பேர்த்தில் உள்ள எடித் கோவன் பல்கலைக் கழக ஆய்வுத்துறையில் கௌரவ பேராசிரியராக பணியாற்றி வந்தவர் டேவிட் குட்ஆல் (வயது 104). தமது விருப்பப்படியே தமது உயிரை மாய்த்துக் கொண்டார். முதுமைக்காலத்தில் இருந்த இவருக்கு கொடிய நோய்கள் இல்லை என்றாலும், அவரது வாழ்க்கைத்தரம் மிகவும் மோசமடைந்து வந்தது.

எனவே தனது வாழ்க்கையை முடித்துக்கொள்ள விஞ்ஞானி டேவிட் குட்ஆல் விரும்பினார். தனது தற்கொலைக்கு உதவுமாறு ஆஸ்திரேலிய அரசுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால், ஒருவரின் தற்கொலைக்கு உதவுவது சட்டவிரோதம் என்ற கொள்கையை கடைப்பிடித்து வரும் நாடுகளில் ஆஸ்திரேலியாவும் ஒன்று. எனவே டேவிட்டின் கோரிக்கையை ஏற்க மறுத்தது.

அதேநேரம் சுவிற்சர்லாந்தில், தங்கள் வேலையை தாங்களே செய்யும் அளவுக்கு உடல் ரீதியாக திடகாத்திரமாக இருக்கும் ஒருவர், நீண்ட காலமாக தானாகவே இறக்கும் கோரிக்கை கொண்டிருந்தால், அவரது தற்கொலைக்கு உதவுவது சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறது..

எனவே ஆஸ்திரேலிய அரசின் புறக்கணிப்பால் விரக்தியடைந்த டேவிட் குட்ஆல், சுவிற்சர்லாந்துக்கு வந்தார். அவரது அமைதியான மரணத்துக்கு உதவ முன்வந்த 'எக்சிட் இன்டர்நேஷனல்' நிறுவனம், அவரது பயணத்துக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தது.

அதன்படி சுவிற்சர்லாந்து வந்திறங்கிய அவர், பசல் நகரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு நேற்றுமுன்தினம் காலையில் விஷ ஊசி செலுத்தி மரணம் விளைவிக்கப்பட்டது. அவர் அமைதியாக மரணித்தார் என எக்சிட் அமைப்பின் நிறுவுநர் பிலிப் நிட்ஸ்கி கூறினார்.

முன்னதாக நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்த டேவிட் குட்ஆல், தனது வாழ்வை முடித்துக்கொள்ள ஆர்வமாய் இருக்கிறார் எனவும், ஆஸ்திரேலியாவிலேயே இந்த வசதியை ஏற்படுத்தித் தந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் என்றும் கூறினார்.

இனி மேலாவது இத்தகைய நடவடிக்கைக்கு அனுமதிப்பது குறித்து ஆஸ்திரேலியாவும், பிற நாடுகளும் பரிசீலிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

# பெரம்பலூரில் கார்கள் கோர விபத்து; ஒரே குடும்பத்தில் ஒன்பது பேர் சாவு

## மது போதையில் வாகனத்தைச் செலுத்தியமையினால் விபரீதம்



சென்னை, மே 12

தமிழ்நாடு பெரம்பலூர் அருகே மது போதையில் சாரதி வாகனத்தைச் செலுத்தியமையால் கட்டுப்பாட்டை இழந்த அவரது கார் சாலை தடுப்பில் மோதி எதிரில் வந்த கார் மீது மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 குழந்தைகள் உட்பட 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் சின்ன காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர் மோகன். இவர் கோடை விடுமுறையில் குடும்பத்தாருடன் கொடைக்கானலுக்குப் போக முடிவு செய்தார். நேற்று மதியம் தனது மனைவி, மகள் மற்றும் உறவினர்களுடன் சென்னையிலிருந்து புறப்பட்டார். டவேரா வாடகை காரில் கொடைக்கானல் நோக்கிச் சென்றனர். நள்ளிரவு 12.30 மணி அளவில் அந்தக்கார் பெரம்பலூர் அருகே திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் நான்கு ரோடு பகுதியில் சென்று கொண்டிருந்தது.

திருச்சியிலிருந்து கடலூர் மாவட்டம் பெண்ணாடம் நோக்கித் தனியார் கார் சென்று கொண்டிருந்தது. காரை ஓட்டுநர் சக்தி சரவணன் என்பவர் சாரதி சென்றார். கார் திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் நான்கு ரோடு பகுதியில் பெரம்பலூர் அருகே சென்றபோது கட்டுப்பாட்டை இழந்து சென்டர் மீடியனில் மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட கார் எதிரே சின்னக்காஞ்சிபுரத்திலிருந்து கொடைக்கானல் நோக்கி டவேரா காரின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இதில் டவேரா கார் உருத்தெரியாமல் நொறுங்கியது. இந்த விபத்தில் டவேரா காரில் பயணித்த மோகன் குடும்பத்தைச் சேர்ந்த 2 குழந்தைகள், 3 பெண்கள் உட்பட 9 பேர் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் 5 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்த அனைவரும் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்த விபத்தால் திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. பொலிஸார் நடத்திய விசாரணையில் கட்டுப்பாட்டை இழந்து மோதிய தனியார் கார்ச் சாரதி சக்தி சரவணன் குடிபோதையில் வாகனத்தை செலுத்தியமையால் கார் கட்டுப்பாட்டை இழந்து சாலைத்தடுப்பில் மோதி விபத்துக்கு காரணமாகி உள்ளது. எனத் தெரிய வந்துள்ளது.

# ஸ்ரீதேவியின் இறப்பு குறித்து விசாரிக்க நீதிமன்றம் மறுப்பு

புதுடில்லி, மே12

நடிகை ஸ்ரீதேவியின் மரணம் குறித்து விசாரணை நடத்தக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை இந்திய உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

பிரபல நடிகை ஸ்ரீதேவி, கணவர் போனி கபூரின் மைத்துனர் மோகித் மார்வா இல்லத் திருமணத்துக்காக அண்மையில் துபாய் சென்றிருந்தார். திருமணம் முடிந்து அங்குள்ள 'ஜுமெய்ரா எமிரேட்ஸ் டவர்ஸ்' என்ற நட்சத்திர ஓட்டலில் கணவருடன் தங்கினார். அன்றிரவு அவர் குளியல் அறைக்கு சென்ற போது நெஞ்சு வலி ஏற்பட்டு மயங்கி விழுந்தார்.



பின்னர் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது, மாரடைப்பு ஏற்பட்டு அவர் ஏற்கனவே மரணம் அடைந்து விட்டார் என டாக்டர்கள் தெரிவித்தனர். இந்திய திரையுலகத்தையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது ஸ்ரீதேவியின் மரணம்.

ஸ்ரீதேவி, டுபாயில் மரணம் அடைந்தது குறித்து விசாரணை நடத்தக்கோரி இந்திய உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.



# கோதாவரி நதியில் 120 பயணிகளுடன் சென்ற சுற்றுலாப் படகில் திடீரெனத் தீ!

விஜயவாடா, மே12

ஆந்திர மாநிலம், கோதாவரி நதியில் 120 பயணிகளுடன் சென்ற சுற்றுலாப் படகில் நேற்றுத் திடீரெனப் பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டது. எனினும் பயணிகள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.



அனவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்

மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. படகில் இருக்கும் பயணிகளை மீட்கும் பணியில் தியணைப்பு துறையினர் மற்றும் பொலிஸார் துரிதமாக ஈடுபட்டனர். தீ விபத்தில் சிக்கிய 80 பேரை தியணைப்புத் துறையினர் முதலில் மீட்டனர். 40 பேரை மீட்கும் பணி தொடர்ந்து வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

இந்த விபத்தில், உயிரிழந்தவர்கள் குறித்த தகவல் எதுமில்லை. படகில் இருந்தவர்கள், ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வேண்டுதலுக்காக தன் நாக்கை அறுத்துக் கொண்ட பெண்மணி

சமய வேண்டுதலுக்காக தனது நாக்கை அறுத்துக் கொண்டிருக்கின்றார் ஒரு பெண்.

மத்தியப்பிரதேசத்தின் தராஸ்மா பகுதியைச் சேர்ந்தவர் குத்தி தோமார். இவர் மொரேனா அருகே உள்ள துர்க்கை அம்மன் கோவிலுக்கு தினமும் காலை, மாலை என இரண்டு வேளைகளிலும் சென்று சாமி கும்பிட்டு வந்துள்ளார். இந்நிலையில் கடந்த புதன்கிழமை வழக்கம் போல் கோவிலுக்குச் சென்றவர், அப்போது யாரும் எதிர்பாராத வகையில் தமது நாக்கை அறுத்துக் கொண்டார்.

இதனால் மயங்கி விழுந்தவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்து உள்ளனர். வேண்டுதலுக்காக, தோமார் தமது நாக்கை அறுத்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

# நிர்மலாதேவியின் பிணைமனு நிராகரிப்பு

கைது செய்யப்பட்ட பேராசிரியை நிர்மலாதேவியின் பிணை மனுவை ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை தள்ளுபடி செய்துள்ளது.

நிர்மலாதேவி தன்னைப் பிணையில் விடுவிக்கக் கோரி ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்த நிலையில் அவரது மனு நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

அருப்புக்கோட்டை தனியார் கல்லூரியின் பேராசிரியை நிர்மலாதேவி மாணவிகளைப் பாலியலுக்கு அழைத்த விவகாரம் தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட நிர்மலாதேவி வழங்கிய தகவலின் அடிப்படையில் பேராசிரியர் முருகனைப் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், இந்த வழக்கில் தொடர்புடைய ஆராய்ச்சி மாணவர் கருப்பசாமி மதுரை நீதிமன்றில் சரண் அடைந்திருந்தார்.

# சிறுமி மீது பாரதீய ஜனதா எம்.எல்.ஏ. பாலியல் கொடூரம் எனக் குற்றச்சாட்டு

## சி.பி.ஐ. விசாரணையில் உண்மை அம்பலமாம்

உத்தரப் பிரதேசத்தில் உன்னோவ் சிறுமியை பா.ஜ கவின் எம்.எல்.ஏயான குல்தீப் சிங் செங்கர் பாலியல் பலாத்காரம் செய்திருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக சி.பி.ஐ. தெரிவித்து உள்ளது.

பாரதீய ஜனதா கட்சி ஆட்சி நடக்கிற உத்தரபிரதேச மாநிலத்தில் 18 வயது பெண் ஒருவர் கும்பல் கற்பழிப்புக்கு ஆளானார். இது தொடர்பாக, பங்கார்மாவ் தொகுதி ஆளும் கட்சி எம்.எல். ஏயான குல்தீப் சிங் செங்கார் உள்ளிட்டவர்கள் மீது பாலியல் பலாத்கார வழக்கு போடப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து பாதிப்புக்கு ஆளான பெண்ணின் தந்தை தாக்கப்பட்டு, உயிரிழந்தார். இதிலும் எம்.எல்.ஏயின் ஆதரவாளர்கள் மீது புகார் எழுந்து உள்ளது.

இந்த நிலையில் எம்.எல்.ஏ. குல்தீப் சிங் செங்கார் புதனன்று லக்னோவில் பொலிஸில் சரண் அடையச் சென்றார். ஆனால் அவர் சரண் அடைய அனுமதிக்கப்படவில்லை. இந்தச் சர்ச்சைக்கு உரிய வழக்கில் திடீர் திருப்பமாக, விசாரணையை சி.பி.ஐ.க்கு மாற்றி விட மாநில அரசு முடிவு எடுத்துள்ளது.



இந்நிலையில் லக்னோவில் குல்தீப்சிங் செங்கரை தடுப்புகாவலில் எடுத்து சி.பி.ஐ. விசாரணை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் விசாரணையில் குல்தீப்சிங் செங்கர் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்தமை உறுதி செய்யப்பட்டு உள்ளது என்று கூறப்படுகின்றது.

பாலியல் பலாத்காரம் செய்யும் அறைக்குக் காவலாக, அவரது பெண் உதவியாளர் ஷி சிங் உதவியுள்ளார் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளதாம்.

பா.ஜ.கட்சி எம்.எல்.ஏயான செங்கர் உட்பட சிலர் தன்னை பாலியல் வன்கொடுமை செய்தனர் என அந்தச் சிறுமி தொடர்ந்து கூறி வந்தாலும், எம்.எல்.ஏக்குச் சாதகமாக செயல்பட்ட காவல்துறையினர், ஜூன் 20 ஆம் திகதி எம்.எல்.ஏ. மற்றும் அவரது சகாக்களைத் தவிர்த்துவிட்டுப்பிறரின் பெயர்களை மட்டும் சேர்த்து முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து சி.பி.ஐ. அதிகாரிகள் கூறுகையில், பாதிக்கப்பட்டதாகக் கூறிய பெண்ணை மருத்துவ பரிசோதனைக்கும் அனுப்பாமல், அவரது ஆடைகளையும் ஆய்வுக்கூடத்துக்கு அனுப்பாமல் காவல்துறையினர் அலட்சியமாக இருந்துள்ளனர். இது, குற்றவாளிகளுக்கு ஆதரவாக காவல்துறை செயல்பட்டமையை அப்பட்டமாகக் காட்டுகிறது என்று கூறப்பட்டது.

காலைக்கதிர்



## மேல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், என்.எம்.எம் அப்துல்லா மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூத்த அரச சட்டவாதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன் ஆகிய மூவரும் மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நேற்றுப் பதவியேற்றனர்.

மேல்நீதிமன்ற நீதிபதிகள் 13 பேரும் தமது கடமைகளை எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாகாண மேல் நீதிமன்ற அமர்வுகளில் பொறுப்பேற்பர்.

**திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்**

வவுனியா மாவட்ட நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரன், இலங்கை நீதிச் சேவையில் சிறப்புத் தரத்தில் உள்ளார். அவர், வவுனியா நீதிவான் நீதிமன்றுக்கு 2002ஆம் ஆண்டு முதல் நியமனம் பெற்றார்.

அதனைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு மாற்றலாகி வந்த அவர், 2003ஆம் ஆண்டு தொடக்கம் 2007ஆம் ஆண்டுவரை ஊர்காவற்றுறை மற்றும் யாழ்ப்பாணம் நீதிமன்றங்களில் நீதிவானாகவும் மாவட்ட நீதிபதியாகவும் பணியாற்றினார்.

பின்னர் கொழும்புக்கு மாற்றப்பட்ட அவர், மீளவும் 2010ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாகி வந்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நியாயாதிக்க வலயத்திலுள்ள நீதிமன்றங்களில் நீதிவானாகவும் மாவட்ட நீதிபதியாகவும் சேவையாற்றினார்.

மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், எதிர்வரும் திங்கட்கிழமை கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையைப் பொறுப்பேற்பார். அத்துடன் கல்முனை மற்றும் மட்டக்களப்பு குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற அமர்வுகளிலும் அவர் கடமையாற்றுவார்.

**என்.எம்.எம் அப்துல்லா**

திருகோணமலை மாவட்ட நீதிபதியான என்.எம்.எம் அப்துல்லா, இலங்கை நீதிச் சேவையில் சிறப்புத் தரத்தில் உள்ளவர். வடக்கு – கிழக்கில் நீதிவானாகவும் மாவட்ட நீதிபதியாகவும் அவர் கடமையாற்றினார். சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாக 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடமையாற்றினார்.

மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம் அப்துல்லா, வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக எதிர்வரும் திங்கட்கிழமை கடமையைப் பொறுப்பேற்பார்.

**சாந்தன் சூசைதாஸன்**

சட்டமாஅதிபர்திணைக்களத்தில் அரச சட்டவாதியாக 14 ஆண்டுகளாகக் கடமையாற்றும் மூத்த அரச சட்டவாதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன், மேல் நீதிமன்ற நீதிபதியாக நீதிச் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சென்.ஜேம்ஸ் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட மூத்த அரச சட்டவாதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன், யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவராவார்.

2004ஆம் ஆண்டு அரச சட்டவாதியாகச் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குள் சேவையை ஆரம்பித்த அவர், யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், மற்றும் கல்முனை என வடக்கு – கிழக்கிலுள்ள அத்தனை மேல் நீதிமன்றங்களிலும் அரச சட்டவாதியாகக் கடமையாற்றினார்.

2014ஆம் ஆண்டுவரை அரச சட்டவாதியாகச் சேவையாற்றிய அவருக்கு, மூத்த அரச சட்டவாதியாகச் சட்டமா அதிபரால் பதவியுயர்வு வழங்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை மேன் முறையீட்டு நீதிமன்றில் அரச சட்டவாதியாகக் கடமையாற்றிய டெனிஸ் சாந்தன் சூசைதாஸன், மேல் நீதிமன்ற நீதிபதியாக நீதிச் சேவைக்குள் உள்வாங்கப்படுகிறார்.

அத்துடன், குடியியல் மற்றும் குற்றவியல் என இரண்டு பிரிவுகளிலும் நிபுணத்துவம் பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன், எதிர்வரும் திங்கட்கிழமை கல்முனை மற்றும் மட்டக்களப்பு குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையைப் பொறுப்பேற்பார்.

சட்டமா அதிபர் திணைக்கள மூத்த அரச சட்டவாதிகளை மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கும் வழக்காறுக்கு அமைய சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்ட பரிந்துரையை ஏற்றுப் பிரதம நீதியரசரால் டெனிஸ் சாந்தன் சூசைதாஸனுக்கு மேல் நீதிமன்ற நீதிபதி நியமனம் வழங்கப்படுகிறது.

நீதித்துறையால் பின்பற்றப்படும் இந்த வழக்காறுக்கு அமைய மூத்த அரச சட்டவாதி ஒருவர் நீதிவானாகக் கடமையாற்றாமல் நேடியாக மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படுவர். (ஐ-7)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன கெட்டியாராச்சி வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் சிங்கள டிப்ளோமா கற்கைநெறியை நிறைவு செய்த 600 மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெற்றது. அதில் பங்கேற்று உரையாற்றும்போதே யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மக்கள் மிகவும் புத்திசாலிகள் – நல்லவர்கள். எனினும் கடந்த 30 ஆண்டுகள் நீடித்த போர், வடக்கு மக்களையும் தெற்கு மக்களையும் சற்றுப் பிரித்துவிட்டது.

தெற்கு சிங்கள மக்கள் வடக்குத் தமிழ் மக்கள் மீது நல்ல அபிப்பிராயம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். 30 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் வடக்கில் மின்சாரம் இல்லாத நிலையில் கூட வடக்கிலிருந்து சிறந்த மருத்துவர்கள், பொறியியலாளர்கள் உருவாகியிருந்தார்கள்.

எனவே தற்கால இளையோருக்கும் நான் ஒன்றைக் கூற வருகிறேன். இராணுவத்தைச் சிங்கள இராணுவம் என எண்ணாதீர்கள். இராணுவ வேலையும் ஒரு அரச வேலைதான்.

எனவே வடக்கு இளைஞர்களும் இராணுவத்தில் இணைந்து இந்த நாட்டின் வளர்ச்சிக்குச் சேவையாற்ற முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றேன். – என்றார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரும் பங்கேற்றார். (ஐ-7)

## யாழ். மேல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செழியன் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக மாற்றம் பெறுகிறார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கை நடத்தி முடித்த தீர்ப்பாயத்தின் (ட்ரயல் அட் பார்) மேல் நீதிமன்ற நீதிபதிகள் பாலேந்திரன் சசி மகேந்திரன், அன்னலிங்கம் பிரேமசங்கர் மற்றும் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகிய மூவருக்கும் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவால் இடமாற்றம் வழங்கப்பட்டது.

அவர்களின் இடமாற்றம் எதிர்வரும் மே 26ஆம் திகதி நடைமுறைக்கு வரும் எனப் பிரதம நீதியரசரால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

வருடாந்த இடமாற்றத்தின் கீழ் மூன்று ஆண்டுகள் ஒரே மாகாண மேல் நீதிமன்ற அமர்வில் கடமையாற்றியதன் அடிப்படையில் நாடு முழுவதும் மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு இடமாற்றம் வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக மாற்றம் பெற்றுள்ளார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட குழப்ப நிலையையடுத்து மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், 2015ஆம் ஆண்டு மே 20ஆம் திகதி உடன் நடைமுறைக்கு வரும் வகையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அப்போதைய பிரதம நீதியரசர் கே.சிறிபவன், யாழ்ப்பாணத்துக்கு வந்து நிலைமையை ஆராய்ந்து இந்த நியமனத்தை வழங்கியிலிருந்தார்.

இந்த நிலையில் கடந்த 3 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் நீதித்துறையைக் கட்டுக்கோப்புடன் முன்னெடுப்பதில் மாவட்ட நீதிபதிகள், நீதிவான்களுடன் இணைந்து தனது கடமைகளை மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னெடுத்திருந்தார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரடங்கிய தீர்ப்பாயத்தில் ஒருவராக இருந்த மாணிக்கவாசகர் இளஞ்செழியன், சுமார் 400 பக்கங்களைக் கொண்ட தீர்ப்பை வழங்கியிருந்தார்.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக மாற்றம் பெற்றுள்ளார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரடங்கிய தீர்ப்பாயத்தின் நீதிபதிகளில் ஒருவராக இவர் இருந்தார்.

இவர் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதியாக 2013ஆம் ஆண்டு தொடக்கம் 2014 இறுதி வரை பணியாற்றியிருந்தார். பின்னர் வவுனியா மற்றும் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதிகளாக பதவி வகித்து மீளவும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரன், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக மாற்றம் பெற்றுள்ளார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரடங்கிய தீர்ப்பாயத்தின் தலைவராக இவர் இருந்தவர். அத்துடன், வவுனியா மேல் நீதிமன்றில் அரசியல் கைதிகளுக்கு எதிராக தொடரப்பட்ட பல வழக்குகளைத் துரிதமாக முடிவுறுத்தி நிரபராதிகளை விடுவித்திருந்தார். (ஐ-7)

## மிகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ள அரசினால் அமைக்கப்பட்டுள்ள இந்த அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

பல்வேறு தடங்கல்களுக்கு மத்தியில் அரசினால் அமைக்கப்பட்ட இந்த அலுவலகம் இன்று சனிக்கிழமை முதல் காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்களை மாவட்ட ரீதியாகச் சந்தித்து, வாக்குமூலங்களைப் பதிவு செய்யவுள்ளது.

காணாமற்போனோரைக் கண்டறியும் நடவடிக்கைகளில் முக்கியக் கட்டமாக இந்தச் செயற்பாடு காணப்படுவதால், இவை அனைத்தும் வினைத்திறனாக அமைவதற்கு உறவினர்கள் பொறுமைக் காப்பது அவசியம் என்று அலுவலகம் கோரியுள்ளது.

இந்த அலுவலகத்தின் பிரதிநிதிகள் எதிர்வரும் வாரங்களில் திருகோணமலை, முல்லைத்தீவு, கண்டி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கான விஜயங்களையும் மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இராணுவத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

கற்சிலைமடுப் பகுதியில் புதுக்குடியிருப்பு செல்லும் பிரதான வீதியில் தனியார் காணி ஒன்றில் 64ஆவது படைப் பிரிவின் இராணுவ முகாம் அமைந்துள்ளது. அதில் பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பௌத்த விகாரை அமைக்கப்படும் காணி தனியார் ஒருவர் உரிமை கோரியிருந்தார். அந்தக் காணி தனியார் ஒருவருக்குச் சொந்தமானது என்பதைப் பிரதேச செயலகமும் உறுதிப்படுத்தியுள்ளது. இந்த விடயம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில், தனது காணியை மீட்டுத் தருமாறு கோரிக் காணியின் உரிமையாளர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பொறுப்பதிகாரியும் சட்டத்தரணியுமான ஆர். எல். வசந்தராஜா தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 25ஆம் திகதி அந்தப் படைமுகாமின் பொறுப்பதிகாரியையும், இலங்கை இராணுவத் தளபதியையும், காணியின் உரிமையாளரையும் விசாரணைக்கு வருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

(ஐ-100)

## மாணவப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று இன்று மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடலைப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நேற்று மேற்கொள்ளப்பட்டபோதும், அதற்கான அனுமதி பல்கலைக்கழகத்தால் மறுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து திருநெல்வேலியிலுள்ள விருந்தினர் விடுதியில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களின் மாணவர்பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

கலந்துரையாடலின் பின்னர், முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னெடுப்பது தொடர்பான மக்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து அதனைக் கூட்டாக முன்னெடுப்பது தொடர்பில் முதலமைச்சருடன் சந்திப்பொன்றை நடத்த விரும்புவதாக அவர்கள் அறிவித்திருந்தனர்.

அத்துடன் இதற்கான நேரமொன்றை ஒதுக்கித் தருமாறு அவர்கள் முதலமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

அவர்களது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இன்று சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு அவர்களைச் சந்திக்க முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் முன்வந்துள்ளார். (ஐ-7)

## மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபதி கலையரங்கில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டபோதும் அதனை அங்கு நடத்தப் பல்கலைக் கழக நிர்வாகம் அனுமதி மறுத்துள்ளது.

இந்தத் தகவலை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைமையில் பேரமுச்சியுடன் நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் எனப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்தது.

இதில் பல்கலைக்கழக அனைத்துப்பீடங்களின் மாணவர் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், தொழில்நுட்பக் கல்லூரிகளின் மாணவர் பிரதிநிதிகள், கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர் பிரதிநிதிகள், கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்வார் என ஒன்றியம் கூறியிருந்தது.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் கூட்டத்தை நடத்த நிர்வாகம் அனுமதி மறுத்ததால், திருநெல்வேலியிலுள்ள தனியார் விடுதியில் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலை நடத்துவது தொடர்பில் மாணவர்கள் போதிய தகவல்களை உரிய முறையில் நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தாத காரணத்தினாலேயே நிர்வாகம் அனுமதி கொடுக்க மறுத்ததாகப் பல்கலைக்கழகப் பதிவாளர் வி. காண்டீபன் தெரிவித்தார். (ஐ-7)



# செவில்லாவிடம் தோற்றது மட்ரிட்

ஸ்பானிய உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டிகளில், செவில்லா அணியிடம் றியல் மட்ரிட் அணி தோற்றதுடன், வில்லாறியல் அணியை லா லிகா சம்பியன்களாக தம்மை உறுதிப்படுத்திக்கொண்டுள்ள பார்சிலோனா வென்றது.

செவில்லாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் றியல் மட்ரிட் தோல்வியடைந்தது. செவில்லா சார்பாக விஸாம் பென் யெடர், மைக்கல் லயுன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, மற்றைய கோல் றியல் மட்ரிட்டின் அணித் தலைவர் சேர்ஜியோ றாமோஸின் 'ஓண்' கோலால் கிடைத்திருந்தது. றியல் மட்ரிட் சார்பாக, பொர்ஜா மயோரல், சேர்ஜியோ றாமோஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தனர். இப்போட்டியில் சேர்ஜியோ றாமோஸ் பெனால்டியொன்றைத் தவறவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 5-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வென்றிருந்தது. பார்சிலோனா சார்பாக, உஸ்மான் டெம்பிலி இரண்டு கோல்களைப் பெற்றதோடு, பிலிப் கோச்சினியோ, போலின்ஹோ, லியனல் மெஸ்ஸி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். வில்லாறியல் அணி சார்பாகப் பெறப்பட்ட கோலை நிக்கொலா சன்சொனே பெற்றிருந்தார்.

# ஆர்சனல் தோல்வி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நேற்றுமுன் தினம் இடம்பெற்ற போட்டிகளில் லெய்செஸ்டர் சிற்றி, மன்செஸ்டர் சிற்றி, டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் ஆகிய அணிகள் வென்றுள்ளதுடன், செல்சி, ஹட்டர்ஸ்பீல்ட் அணிகளுக்கிடையேயான போட்டி சமநிலையில் முடிவடைந்திருந்தது.

தமது மைதானத்தில் நடைபெற்ற போட்டியில், 3-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனலை லெய்செஸ்டர் சிற்றி வென்றது. லெய்செஸ்டர் சிற்றி சார்பாக, கெலெச்சி லெஹ்ஹாஞ்சோ, ஜேமி வார்டி, றியாட் மஹ்ரேஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை பியரி எம்ரிக் அபுமெயாங் பெற்றிருந்தார்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியன் அணியை மன்செஸ்டர் சிற்றி வென்றிருந்தது. மன்செஸ்டர் சிற்றி சார்பாக, டனிலோ, பேர்னார்டோ சில்வா, பேர்ணான்டின்ஹோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியன் சார்பாகப் பெறப்பட்ட கோலை லியனார்டோ உல்லோ பெற்றிருந்தார்.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற நியூகாசில் யுனைட்டெட் அணிக்கெதிரான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொஸ்பர் அணி வென்றிருந்தது. டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் சார்பாகப் பெற்ற கோலை ஹரிகேன் பெற்றிருந்தார்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற ஹட்டெர்ஸ்பீல்ட் டௌண் அணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் செல்சி சமநிலையில் முடித்திருந்தது. செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்கோஸ் அலோன்ஸோ பெற்றதோடு, ஹட்டெர்ஸ்பீல்ட் டௌண் சார்பாகப் பெறப்பட்ட கோலை லோரண்ட் டெபொய்ட்ரே பெற்றிருந்தார்.



# களி மண் தரையில் நடால் புதிய சாதனை



உலகின் முதல் நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால், களி மண் தரையில் புதிய உலக சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் டென்னிஸ் வீரரான ஜோன் மெக்கன்ரோவ், கடின தரையில் தொடர்ச்சியாக 49 வெற்றிகளைப் பதிவுசெய்திருந்தார். இதுவே ரென்னிஸ் போட்டிகளில் தொடர்ச்சியாக ஒரு வீரர் பெற்றுக்கொண்ட அதிகூடிய வெற்றியாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்தச்சாதனையை சுமார் 34வருடத்துக்குப் பிறகு ரபேல் நடால், தகர்த்துள்ளார். நடால் களி மண் தரையில் தொடர்ச்சியாக 50 வெற்றிகளைப் பெற்று இந்த சாதனையை முறியடித்துள்ளார்.

நடைபெற்றுவரும் மெட்ரிட் பகிரங்க ரென்னிஸ் தொடரில், நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது சுற்று போட்டியில் ஆர்ஜென்ரீனாவின் டியாகோ ஸ்க்வார்ட்ஸ்மேனை, நடால் 6-4, 6-3 என வீழ்த்தினார். இதன் மூலமே இந்தச் சாதனையை அவர் நிலை நாட்டினார்.



# பாக். வீரர்களுக்கு புதிய கட்டுப்பாடு

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் 20/20 லீக் தொடர்களில் விளையாட அந்நாட்டுச் சபை, புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதன்படி, ஒவ்வொரு நாடுகளிலும் நடத்தப்படும் தனித்துவமான 20/20 லீக் தொடர்களில், இனி பாகிஸ்தான் வீரர்கள் ஆண்டுக்கு இரு தொடர்களில் மட்டுமே விளையாட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைப்பளு அதிகம், காயம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விளக்கம் அளித்துள்ளது. பாகிஸ்தான் வீரர்கள், பாகிஸ்தான் சுப்பர் லீக், கரீபியன் பிரீமியர் லீக், பங்களாதேஷ் பிரீமியர் லீக், பிக் பாஷ் போன்ற தொடர்களில் விளையாடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்துக்கான வெள்ளி விழா இறுதியாட்டம் நாளை





கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ண வெள்ளி விழா தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது. இந்தப் போட்டியில் யாழ். சென்ற லைட்ஸ் வி.க. அணியை எதிர்த்து யாழ்.ஜொனியன்ஸ் அணி மோதுகிறது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நாளை காலை 9 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

இந்த இரு அணிகளும் பலம் பொருந்திய அணிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்றலைட்ஸ் அணி 2 ஆவது சுற்றில் ஸ்கந்தாஸ்ரார் அணியை 6 இலக்குகளாலும், கால் இறுதிப் போட்டியில் யாழ். பல் கலைக்கழக அணியை 2 இலக்குகளாலும், மேற்பிரிவு இறுதிப் போட்டியில் விக்டோறி அணியை 7 இலக்குகளாலும் அரை இறுதிப்போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணியை 5 இலக்குகளாலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருக்கின்றது.

யாழ்.ஜொனியன்ஸ் அணி 2 ஆவது சுற்றில் ஒல்ட்கோல்ஸ் அணியை 55 ஓட்டங்களாலும், கால் இறுதியில் ஜொலிஸ்ரார் அணியை 95 ஓட்டங்களாலும், கீழ்ப் பிரிவு இறுதிப்போட்டியில் மானிப் பாய் பரீஸ் அணியை 124 ஓட்டங்களாலும், அரை இறுதிப் போட்டியில் விக்டோறி அணியை 96 ஓட்டங்களாலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மேற்படி தொடரில் இரு அணிகளும் இறுதிப்போட்டி வரை தோல்வியடையாத அணிகள் என்பது குறிப்பிடத்தக்கது. இறுதிப் போட்டி மிக விறுவிறுப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இறுதிப் போட்டியில் 40 பந்து பரிமாற்றங்களைக் கொண்டதாக அமையவுள்ளது.

கடந்த 24 வருடங்களில் சென்றலைட்ஸ் அணி 1991, 1994, 1995, 2009 ஆகிய வருடங்களிலும், யாழ்.ஜொனியன்ஸ் அணி 1992, 2013, 2017 ஆகிய வருடங்களிலும், யாழ். பல்கலைக்கழக அணி 1993, 1998, 1999, 2002 ஆகிய வருடங்களிலும், மானிப்பாய் பரீஸ் அணி 1997, 2003 ஆகிய வருடங்களிலும், ஜொலிஸ்ரார் அணி 2000, 2010, 2011 ஆகிய வருடங்களிலும், பற்றீசியன்ஸ் அணி 2001, 2004, 2005 ஆகிய வருடங்களிலும், கே.சி.சி.சி. அணி 2008, 2012, 2014, 2016 ஆகிய வருடங்களிலும், திருநெல்வேலி சி.சி. அணி 2015 ஆம் ஆண்டிலும் மேற்படி வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றின என்பது குறிப்பிடத்தக்கது.

12.05.2018 இன்று

இரவு 4.00 மணி
Kings XI Punjab v Kolkata Knight Riders

இரவு 8.00 மணி
Delhi Daredevils v Royal Challengers Bangalore

# மக்கள் நலன் பேணும் அமைப்பின் வீட்டுத் திட்டம் கோண்டாவிலில்



கோண்டாவில் மக்கள். நலன்பேணும் அமைப்பின் ஏற்பாட்டில் கோண்டாவில் ஜே/119 பிரிவில் வசிக்கும் உதவி தேவைப்படும் குடும்பம் ஒன்றுக்கு ரூபா 14 லட்சம் செலவில் வீடொன்று அமைத்து வழங்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப்பின் தலைவர் ஜெகபாலன் தலைமையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு வீட்டுக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், நல்லூார்ப் பிரதேச சபை உறுப்பினர் கு.மதுசுதன், மக்கள் நலன் பேணும் அமைப்பின் தலைவர் ஜெகபாலன், செயலாளர் தனுஷன், பேராசிரியர் தேவராஜா, பிரதேச கிராம சேவையாளர் விஜிதன் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-7)

# ஏ.எல். மீளாய்வு பெறுபேறுகள் வெளியாகின




2017ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கான மீள்பரிசீலனை பெறுபேறுகளைப்பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

60 ஆயிரத்து 332 பேர் இம்முறை பரீட்சை மீளாய்வுக்கு விண்ணப்பித்திருத்தனர். அவர்களின் விண்ணப்பங்களுக்கு அமைய ப் பெறுபேறுகளின் வெளியிடப்பட்டுள்ளன.

புதிய வெட்டுப்புள்ளிகளுடன் பெறுபேறுகளைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் பெறுபேறுகளைப் பார்வையிட முடியும் என்று பரீட்சைகள் ஆணையர்ளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார். (ஐ)

# சமுர்த்தி வங்கிக்கு இனிமேல் புதிய முகாமைத்துவக் குழு

சமுர்த்தி வங்கிக்குப் புதிய முகாமைத்துவக் குழுவை நியமிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த முகாமைத்துவக் குழுவின் பிரதான அதிகாரியாகப் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளர் நியமிக்கப்பட உள்ளார்.

இதன்மூலம் சமுர்த்தி வங்கியை மிகச் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்ய முடியும் என மத்திய வங்கி நம்புகிறது.

இதனடிப்படையில் நிதியமைச்சும் இலங்கை மத்திய வங்கியும் இணைந்து நீண்டகால வேலைத் திட்டத்தைச் செயற்படுத்தும். - என்றார். (ஐ)

# ஜனாதிபதி இன்று ஈரான் விஜயம்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று ஈரான் செல்கிறார்.

ஈரான் ஜனாதிபதி ஹஸன் ரவ்ஹானியின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு செல்கிறார்.

இலங்கையுடனான பொருளாதார, வர்த்தக தொடர்புகளைப் பலப்படுத்துவது மற்றும் ஈரான் முதலீடுகளை இலங்கையில் அதிகரிப்பது என்பன குறித்து ஜனாதிபதியின் விஜயத்தின்போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

ஈரான் ஜனாதிபதிக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான சந்திப்பு நாளை இடம்பெறவுள்ளதாகவும், இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# பஸ் கட்டணம் அதிகரிப்பு; இன்னும் தீர்மானமில்லை

பஸ் கட்டணங்களை அதிகரிப்பது குறித்து எது வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.பி.ஹேமசந்திர தெரிவித்தார்.

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து பஸ் கட்டணங்களை எவ்வாறு மறுசீரமைப்பது என்பது பற்றி ஆராயப்படவுள்ளது. இது தொடர்பாக ஆராய்வதற்குப் புத்திஜீவிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு எதிர்வரும் திங்கட்கிழமை கூடி ஆராயும் என்றும் தேசிய போக்குவரத்துஆணைக்குழுவின் தலைவர் மேலும் கூறினார்.

கட்டணங்களை மாற்றும் தீர்மானத்தை மேற்கொள்கின்ற அதிகாரம் இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் இதுவரை எதுவித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விசேட குழுவில் மொரட்டுவ பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வரவு - செலவுத்திட்டத் திணைக்கள அதிகாரிகள், தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் நுகர்வோர் அதிகார சபை உத்தியோகத்தர்களும் உள்ளடங்குகின்றனர். (ஐ)

# GLOBAL LIFESTYLE LANKA (PVT) LTD

## பாடசாலைக்கு வழங்கிய உதவித் திட்டங்கள்













Global Lifestyle Lanka Private Limited (GLL) நிறுவனமானது பசுமை மற்றும் சுற்றுச்சூழல் மீது அக்கறை கொண்டு, காற்றிலுள்ள கரிமம் போன்றவற்றைக் குறைக்கும் விளைபொருள்கள் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றது. சமூகத்தின் மீது அக்கறை கொண்டு பல்வேறு சமூக நலத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில், வடமாகாணத்தில் பின்தங்கிய 1000 பாடசாலை மாணவர்களுக்குக் காலணிகளையும், 35 பாடசாலைகளுக்கு கணணிகளையும் நன்கொடையாக வழங்கியுள்ளது. அத்துடன் ஐந்து பாடசாலைகளின் பாலர் வகுப்புப் பிரிவிலுள்ள கட்டடங்களுக்கு வர்ணம் பூசும் நடவடிக்கை நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது.

அந்தவகையில் இந்நிறுவனத்தினால் மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, சாவகச்சேரி ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், வவுனியா பாலமோட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, வவுனியா கோவில் குஞ்சுக்குளம் மகாவித்தியாலயம், முல்லைத்தீவு முத்தையன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, யாழ்.மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கு இந்த உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. வடமாகாண GLL ஊழியர்கள் நேரடியாக விஜயம் இப்பாடசாலைகளை அவதானித்து இந்த உதவித் திட்டங்களை வழங்கியுள்ளனர்.

கடந்த நவம்பர் 26ஆம் திகதி வவுனியா றோயல் கார்டின் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது Global Lifestyle Lanka Private Limited (GLL) நிறுவனம் ஒரு தொகுதி பொருட்களை கையளித்திருந்தது. இந்த நிகழ்வுக்கு சிறப்பு அழைப்பாளர்களாக யாழ்ப்பாணத்தின் துணை காவல்துறை ஆய்வாளரும், வவுனியா துணை காவல்துறை ஆய்வாளருக்குப் பதிலாக காவல்துறை துணை மேலதிகாரி ஆகியோரும் வருகை தந்து நிகழ்வை சிறப்பித்தனர். இந்த நிகழ்வின் இன்னொரு பகுதியாக வவுனியா இரத்ததான வங்கியோடு இணைந்து இந்நிறுவனம் ஒரு குருதிக் கொடை முகாமையும் ஒருங்கிணைத்திருந்தது. இதில் 150 பேர் வரையில் கலந்து கொண்டு இரத்ததானம் செய்திருந்தார்கள்.

இதன் தொடர்ச்சியாக குறித்த பாடசாலைகளுக்கான ஏனைய உதவித் திட்டங்கள் இந்நிறுவனத்தின் உத்தியோகத்தர்களால் நேரடியாக விஜயம் செய்து வழங்கப்பட்டுள்ளன. அந்த வகையில் 35 கணனிகள் வழங்கப்பட்டுள்ளமையுடன் வர்ணப் பூச்சுகளும் பூசப்பட்டு பாடசாலைகளுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தகவல் :- GLL நிறுவனம்

(சி-0101)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.05.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது